



# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - ரூபா 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :288 ஆவணி 28 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 13 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

எதிர்ப்புக்களையடுத்து

# ‘20’இல் கைவைக்கிறது அரசு
# புதிய வர்த்தமானி விரைவில்

கொழும்பு, செப்ரெம்பர் 13

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு திருத்தப்பட்டு, புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார். 26



## இலங்கைக்கு கடத்த இருந்த 1000 கிலோ மஞ்சள் தமிழகத்தில் மீட்பு

சென்னை, செப். 13

இந்தியாவின் மண்டபம் அருகே கடற்கரையிலிருந்து இலங்கைக்கு படகின் மூலம் கடத்தத் தயார் நிலையில் இருந்த சுமார் 26

## வடக்குக்கு படையெடுக்கும் அமைச்சர்கள்

யாழ்ப்பாணம், செப். 13

ராஜபக்ச அரசு பதவிக்கு வந்த பின்னர் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் இந்த 26

## தனிமைப்படுத்தலிருந்து தப்பித்தவர் கைது

மன்னார், செப். 13

வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தப்பியவர் நேற்று சனிக்கி 26

## உண்ணாவிரதமிருந்து சாகவில்லையாம் நோயாளி என்பதாலேயே உயிரிழந்தாராம்

*தியாக தீபம் திலீபனின் சாவை கொச்சைப்படுத்துகிறார் கமால் குணரட்ன*

கொழும்பு, செப். 13

உண்ணாவிரதப் போராட்டத்தால் திலீபன் உயிரிழக்கவில்லை. அவர் ஒரு நோயாளி என்பதாலேயே உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பிரபாகரனால் அனுப்பப்பட்டிருந்தார் என்று 26

## செயலரின் பதவி விலகலை கேள்விக்கு உட்படுத்த முடியாது

*இப்படிச் சொல்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்*

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலர் கி.துரைராஜசிங்கத்தின் 26

## கடமையைப் பொறுப்பேற்றவுடனே பதவி விலகல் கடிதம் ஒப்படைப்பு

பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் யாழ்ப்பாணத்தில் இப்படியும் சம்பவம் 26

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி



# 20 இற்கு எதிரான போராட்டம்: களமிறங்குகின்றார் சந்திரிகா

*எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சு*



கொழும்பு, செப். 13

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு குறித்து எதிர்க்கட்சிகள் ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆதரவு தெரிவித்துள்ளார்.

தற்போது குறித்த ஆர்ப்பாட்டங்களின் எதிர்காலநடவடிக்கை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அவர் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டுள்ளார்.

அவரது தலைமையின் கீழ் உருவான சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்ட சந்திரிகா தற்போது எதிர்க்கட்சிகளுடன் கைகோர்த்து ராஜபக்ச அரசுக்கு எதிரான போராட்டங்களில் களமிறங்கவுள்ளார்.

அவர் விரைவில் பொது மேடைகளில் ஏறவுள்ளார் என்று நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ.5,22)

# அமைதியைச் சீர்குலைக்காதீர்கள் விக்கியிடம் சஜித் அணி கோரிக்கை

கொழும்பு, செப். 13

**இனவாதம், மத வாதத்தை மக்களின் மனங்களில் உருவாக்கி அமைதியை இல்லாமல் செய்துவிட வேண்டாம் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் டயனா கமகே கோரிக்கை விடுத்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தின்போதே டயனா கமகே, விக்னேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் படும் துன்பங்களை நான் அவதானித்துள்ளேன். ஆனால், வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் மிகவும் இனவாத, மத வாத பேதத்துடன் பேசுவதை கடந்த காலங்களில் அவதானித்தோம். நீங்கள் (விக்னேஸ்வரன்) எமக்கு இல்லாமல் போன ஆறுமுகன் தொண்டமானின் புத்தகத்தில் பக்கமொன்றை எடுங்கள். அவர் அவரின் மக்களுக்காகச் சேவை செய்வதற்காக ஜனநாயகத்தைத் தெரிவு செய்த சிறந்த நபராகும்.

வடக்கு மக்களுக்கு வவுனியா தொகுதி அமைப்பாளர் என்ற ரீதியில் இணைந்து பணியாற்றியுள்ளேன். வடக்கு கிழக்குக்கும் நான் போரின் பின்னர் சென்றுள்ளேன். சுதந்திரமடைந்து 73 வருடங்கள் ஆகின்றன. ஆனால், அதில் 43 வருடங்களை மாத்திரமே அனுபவித்தோம். மிகுதி 30 வருடங்களையும் கொடும் போரிலேயே கழித்தோம்.

தமிழ் மக்களுக்குப் போர் மனநிலை அவசியமில்லை. இனவாதம், மதவாதம் அவசியமில்லை. இது ஒருமித்த நாடு. இலங்கையர் என்ற ரீதியில் இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறான நிலைப்பாட்டிலேயே ஆறுமுகன் தொண்டமான் செயற்பட்டார். அவர் சமாதானம், நல்லிணக்கத்துடனேயே செயற்பட விரும்பினார், என்றார். (ஒ.இ)

# துண்டாகியது உள்ளங்கை முல்லையில் ஐவர் கைது

*வாள்வெட்டுக்குழுவுடன் தொடர்புடைய 5 பேர் கைது!*




முல்லைத்தீவு, செப். 13

புதுக்குடியிருப்பு குரவில் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 5 பேரை புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

அங்கு நேற்றுமுன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தர்க்கம் வாள்வெட்டாக மாறியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த வீரையா ரவிச்சந்திரன் (வயது 45) என்பவரின் உள்ளங்கை பகுதி ஆழமான வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது.

அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையிலேயே, வாள்வெட்டுச் சம்பத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடமிருந்த வாள் ஒன்றையும் மீட்டுள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் விசாரணையில் உள்ளனர். இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-19)

( முன்னர் வந்த செய்தி பக்.5இல் )

# 79 எம்.பிக்களுக்கு விரைவில் தீர்வையற்ற வாகனப் பெர்மிட்

கொழும்பு, செப். 13

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 79 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விரைவில் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

முதலில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பின்னர் மற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் சில வாரங்களுக்குள் இப் பத்திரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தீர்வையற்ற சலுகை அனுமதிப்பத்திர அமைப்பின் கீழ், ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் சுமார் 65 லட்சம் ரூபா பெறுமதியான தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதி வழங்கப்படவுள்ளது. நாட்டில் தற்போது வாகன இறக்குமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால், அனுமதிப்பத்திரம் கிடைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது நாட்டில் கிடைக்கும் வாகனங்களை வாங்கலாம் அல்லது இறக்குமதி தடை நீக்கப்படும்போது அல்லது எதிர்காலத்தில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் வாகனங்களை வாங்கலாம் என்று நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

அதே நேரத்தில், பொது சேவையிலுள்ள அதிகாரிகளுக்கும் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதி பெறத் தகுதியானவர்களுக்கு அது வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அரசு அதிகாரிகள் அந்த அனுமதியின் கீழ் 36 லட்சம் ரூபா இறக்குமதித் தீர்வைப் பெற்று வாகனத்தை இறக்குமதி செய்ய முடியும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (ஒ.இ)

# ஹெரோய்னுடன் சிக்கினார் தேரர்



கொழும்பு, செப். 13

ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்தனரென தேரர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாரியபொல பகுதியில் நேற்று அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். வீடு ஒன்றில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட தேரர் துறவியாகவும் சாதாரண நபராகவும் உருமாறிச் செயற்பட்டு வந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-22)

# 660 மதுப் போத்தல்களை கடத்தியோர் கைதாகினர் !

*மன்னார் தள்ளாடியில் சம்பவம்*

மன்னார், செப். 13

பாரவூர்தியில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டுசெல்லப்பட்ட 750 மில்லிலீற்றர் கொள்ளளவுயை 660 மதுப் போத்தல்கள் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

சாராயம் மற்றும் பியர் என்பனவே கொழும்பிலிருந்து முருங்கன் ஊடாக மன்னார் சவுத் பாருக்கு கொண்டு செல்லப்பட்டபோது மன்னார் தள்ளாடி பகுதியில் கைப்பற்றப்பட்டன.

அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் அநுராதபுரத்தைச் சேர்ந்த 29 மற்றும் 39 வயதுடைய வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பாரவூர்தி மற்றும் மதுப் போத்தல்கள் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கு அமைவாக மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி பணிப்பின் பெயரில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன் தலைமையிலான மன்னார் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (து-213,56)

# உரிமை சார்ந்த விடயங்களில் தமிழர்கள் நிலைமாறவில்லை

கூறுகின்றார் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



**கொழும்பு, செப். 13**
**தமிழ் மக்கள் உரிமையையும், அபிவிருத்தியையும் விரும்புகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக, மக்கள் உரிமை சார்ந்த விடயத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிவிட்டார்கள் என்பது தவறானது என்று தெரிவித்துள்ளார், இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன்.**

தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

10 வருடங்களில் தமிழ் மக்களின் உரிமை சார்ந்தோ, அபிவிருத்தி சார்ந்தோ எந்த முன்னேற்றத்தையும் கூட்டமைப்பு காணவில்லை. இது நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவல்ல. இது உள்ளூராட்சி தேர்தலிலேயே ஏற்பட்டது. நல்லாட்சி அரசுக்கு முண்டுகொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் எவற்றையும் பூர்த்தி செய்யவில்லை. 72 வருடங்களாக தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகள் தலைமுறைகளை குழிதோண்டி புதைத்து விட்டன. ஆனால், அவர்களின் தலைமுறைகள் நன்றாக வாழ்கிறார்கள். தமிழ் மக்கள் அரசியல், அபிவிருத்தி இரண்டையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டுக்கும் உரிய கட்சியல்ல. அதனால்த்தான் கடந்த தேர்தல்களில் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவில்லை. அவர்கள் உரிமையையும், அரசியலையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். ஈழம், சுயாட்சி என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கட்டும். அவை வந்தால் நல்லது. ஆனால், அதற்கு முன்னர் மக்களின் அவசிய தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டுமே. இவை பேசிக்கொண்டிருக்க நன்றாக இருக்கும். விஜயகாந்தின் அதிரடி சண்டைக்காட்சிகளை பார்க்க நன்றாக இருக்கும். ஆனால் யதார்த்தம் அதுவல்லவே. வடக்கு மக்களின் பிரச்சினைகள் வேறு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் வேறு. மலையக தமிழர்களின் பிரச்சினைகள் வேறு. ஆனால் தமிழ்த் தலைவர்கள் அனைத்துப் பிரச்சினைகளையும் ஒன்றாகப் பார்க்கின்றார்கள். வடக்கு பிரச்சினை வடக்கிலும், கிழக்கு பிரச்சினை கிழக்கிலும் தீர்க்கப்பட வேண்டும். அப்படியென்றால்த்தான் அந்த மக்களின் இருப்பு பாதுகாக்கப்படும். வடக்கு கிழக்கு இணைப்பு, சுயாட்சி, தன்னாட்சி எல்லாம் நல்லது. ஆனால், அந்தந்த பகுதி மக்களின் இருப்பு பாதுகாக்கப்பட வேண்டும். என்றார். (குஇ)

---

போதைப்பொருள்கள் மீட்பு:

## வவுனியாவில் ஐவர் கைது

வவுனியா, செப். 13

வவுனியாவில் ஹெரோய்ன் மற்றும் கஞ்சா போதைப் பொருள்களை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஐவர் நேற்று கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா சிதம்பரபுரம், தேக்கவத்தை, மாமடு ஆகிய பகுதிகளிலேயே ஐவரும் கைதுசெய்யப்பட்டனர்.

வவுனியா மாமடுவில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 2 கிலோகிராம் கேரளக் கஞ்சா மற்றும் 2 கிராம் ஹெரோய்ன் என்பனவற்றை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.

சிதம்பரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 420 மில்லிகிராம் மற்றும் 310 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

அத்துடன், தேக்கவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 390 மில்லிகிராம் ஹெரோய்ன் மற்றும் 43 ஆயிரம் ரூபா பணம் என்பனவற்றுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த18.110)

---

## இடியன்துப்பாக்கி மீட்பு;

### கல்மடுநகரில் ஒருவர் கைது



தருமபுரம் கமல்மடுநகர் பகுதியில் இடியன் துவக்கு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸார் நேற்று ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

தமக்கு கிடைதத தகவலின்படி அங்கு சென்று அதை மீட்டோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படு வார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த6)

---

## கூட்டணியிலிருந்து சங்கரி உடன் பதவி விலகவேண்டும்

தங்கமுகுந்தன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் என்ற பதவியிலிருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. ஆனந்தசங்கரி உடனடியாக பதவி விலகி இளைஞர்களிடம் கட்சியை ஒப்படைக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் தங்கமுகுந்தன் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியை ச.அரவிந்தன் கைப்பற்ற முயற்சிக்கின்றார் என்று பல தரப்பினரும் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் அரவிந்தன் பதவி விலகவேண்டும் என்று ஆனந்தசங்கரி நேற்றுமுன்தினம் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதுதவிர, 1998ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுவெடிப்பின்போது உயிரிழந்த மாநகர முன்னாள் முதல்வர் சிவபாலனின் 22 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை கட்சி அலுவலகத்தில் கடைப்பிடிக்க அரவிந்தன் அணியைச் சேர்ந்த தங்கமுகுந்தன் தரப்பினர் நேற்றுத் திட்டமிட்டனர். எனினும், கட்சி அலுவலகத்தை பூட்டிவிட்டு ஆனந்தசங்கரி கொழும்பு சென்றுவிட்டார். அதனால் பிறிதொரு இடத்திலேயே நினைவஞ்சலி நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே, தங்கமுகுந்தன் அந்த நிகழ்வில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் 91 வாக்குகளை மட்டும் பெற்ற கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி. அவர்க் இனியும் இந்தக் கட்சியில் இருப்பதற்குத் தகுதியற்றவர். அவர் உடனடியாக இந்த கட்சியை விட்டு வெளியேறி அவருக்கு அடுத்த நிலையிலுள்ள இளைஞர்களிடம் கட்சியை கொடுப்பதன் மூலமே கட்சி தொடர்ந்து அரசியலில் பயணிக்க முடியும். ஆனந்தசங்கரி தன்னிச்சையாக சில முடிவுகளை எடுத்து செயற்படுகின்றார். எமது கட்சி உறுப்பினரின் நினைவேந்தல் நிகழ்வை கட்சி அலுவலகத்தில் நடத்துவதற்குக்கூட அனுமதி வழங்காது கட்சி அலுவலகத்தை பூட்டிவிட்டு கொழும்புக்குச் சென்றுவிட்டார். எனவே உடனடியாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவைக்கூட்டி கட்சியின் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து, ஆனந்தசங்கரி விலக வேண்டும். என்றார். (கு)


# வேலைவாய்ப்பு



யாழில் இயங்கிவரும் அச்சகத்தில் பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- ★ வரவேற்பாளர்
- ★ சந்தை படுத்தல் உத்தியோகத்தர்
- ★ எழுதுவினைஞர்

தகுதியானவர்கள் 16.09.2020 (புதன் கிழமை) முற்பகல் 9.30-12.00 மணி வரை நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு சமுகம்தரவும்.

**ES பிரிண்டர்ஸ்**
இல.357. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக கனடாவின் அழுத்தம் வேண்டும்!!

தமிழ் உணர்வாளர் பற்றார்சன் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

**காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் இலங்கை அரசுக்கு கனடா தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ் உணர்வாளரும், செயற்பாட்டாளருமான வில்லியம் பற்றார்சன் வலியுறுத்தியுள்ளார். கனடாவின் நாடாளுமன்றத்தை நோக்கி தமிழர்கள் நடத்தும் நீதிகோரும் பேரணியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: 'காணாமல் போனவர்களின் நிலையை அறிவதற்காக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுடன் நானும் நடந்து கொண்டிருக்கிறேன். மேலும், அவர்களின் உறவினர்கள் வீதியில் நின்று இலங்கை அரசிடம் பதில்களைக் கோரி ஆயிரத்து 280 நாட்களுக்கு மேலாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களது உறவினர்களைக் காவலில் வைத்துள்ள இலங்கை அரசு, அவர்கள் இருக்கும் இடம், அவர்கள் என்ன குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்கள் அல்லது அவர்களின் நிலை குறித்து இதுவரை அவர்களுக்கு அறிவிக்கவில்லை. இவர்களுக்கு இறப்புச் சான்றிதழ்களை வழங்கப் போவதாக இலங்கை ஜனாதிபதி கூறியிருக்கிறார். இது பல கேள்விகளை எழுப்புகிறது.

அவர்களுக்கு என்ன நேர்ந்தது? அவர்கள் உடல்கள் எங்கே? இது ஏன் நடந்தது?. நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், இவர்கள் காடுகளில் தொலைந்து போனவர்கள் அல்ல. மாறாக இராணுவம் அல்லது பொலிஸ் வாகனங்களில் அல்லது காவல் நிலையங்களுக்குள் சென்றவர்கள். அவர்கள் அரச பராமரிப்பில் இருந்தவர்கள். ஆனால் அரசால் ஏன் எந்தப் பதிலும் கொடுக்க முடியவில்லை? இலங்கை அரசின் மீது அழுத்தம் கொடுக்குமாறு கனேடிய அரசிடம் கோர நானும் இந்த மக்களுடன் இணைந்து நடக்கிறேன். அங்கு தொடரும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும்' - என்றார். (ம-இ)

## நிர்வாகத்தில் சிறந்தவர் அரசியலில் மட்டுத்தான்!

ஜனாதிபதி கோத்தாபய தொடர்பில் சிங்களே அமைப்பின் தேரர் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 13

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இலங்கையில் நிர்வாக அதிகாரி என்ற வகையில் திறமையானவர் என்றாலும் அரசியல் ரீதியான அனுபவம் அவருக்கு குறைவு என்று சிங்களே அமைப்பின் தலைவர் மெடில்லே பஞ்ஞாலோக்க தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவுக்கு இருக்கும் அனுபவ ரீதியான அரசியல் ஞானம் கோத்தாபய ராஜபக்சவுக்கு இல்லை. தேசிய அமைப்புகளை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளி விட்டு வியத் மக போன்ற தனக்கு நெருக்கமானவர்களுடன் செல்லும் பயணம் சிறந்த பயணமாக இருக்காது. இப்படியான பயணத்தை ஜனாதிபதி முன்னெடுக்க மாட்டார் என நம்புகிறோம்.

20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மகிந்த ராஜபக்சவின் நிழலின்றி கோத்தாபய ராஜபக்சவுக்கு வெற்றிகரமான அரசியல் பயணம் இல்லை என்றார். (கஇ)

## ஆசிரியையின் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், செப். 13

கொடிகாமம் கெற்பேலி விடத்தற்பளை பகுதியில் ஆசிரியர் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் அறுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கொடிகாமம் கெற்பேலி பகுதியில் இருந்து விடத்தற்பளைக்கு செல்லும் சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்றது. சுமார் ஒரு பவுண் சங்கிலியே அறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-159)

## குருதிப் பரிசோதனையின்றி சாரதி அனுமதிப்பத்திரங்கள்

கொழும்பு, செப். 13

எதிர்காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும்போது எவ்வித மான குருதிப் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படமாட்டாது என்று போக்குவரத்து சேவைகள் ராஜாங்க அமைச்சர் டிலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக பிரதான கண் பரிசோதனையே இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். சகலருக்கும் எக்ஸ்ரே கதிர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு செலவிடும் பணத்தை சேமிக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் காலங்களில் சீனி மற்றும் குருதி அழுத்தங்கள் தொடர்பான சேவைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இது நபரொருவர் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதில் எந்தத் தாக்கமும் செலுத்தாது - என்றார். (ம-இ)

## மின்சார வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

கெகிராவ பமுணுகம பகுதியில் யானை ஒன்று உயிரிழந்துள்ளது. 25 வயதுடைய 8 அடி உயரம் கொண்ட யானையே அனுமதியின்றி அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்குண்டு உயிரிழந்துள்ளது.

யானையின் உயிரிழப்புக்கு காரணமான மின்சார வேலி அமைத்த நபர் வனவள திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் ரிட்டிகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-இ)



## வீதிச் சமிக்ஞையில் சைக்கிள்களை மோதியது பஸ்

நெல்லியடி, செப். 13

நெல்லியடி சமிஞ்சை ஒளியில் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களை தனியார் பஸ் மோதிச் சேதப்படுத்தியது.

சம்பவம் நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது. பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி பகுதியில் அமைக்கப்பட்ட சமிக்ஞை விளக்கில் சிவப்பு ஒளி ஒளிரத்தொடங்கியதும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களில் பயணித்தவர்கள் பயணத்தை நிறுத்தினர். அதன்போதே 750 ஆம் இலக்க பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து இருவருடைய வாகனங்களை மோதித் தள்ளியது. விபத்தில் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த422)

# தேயிலை அன்பளிப்புச் செய்த இலங்கை: விமர்சனங்கள் மத்தியில் லெபனான் ஜனாதிபதி

கொழும்பு, செப்.13

லெபனானுக்கு இலங்கை வழங்கிய சிலோன் டீ காரணமாக அந்நாட்டு ஜனாதிபதி மைக்கேல் அவுன் மீது ஊடகங்கள் தமது விமர்சனத்தை வெளியிட்டு வருகின்றன.

லெபனானில் அமோனியம் நைட்ரேட் கிடங்கில் வெடிப்பு இடம்பெற்றுள்ள நிலையில், வெடிபொருள் கிடங்கு வெடித்த பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் லெபனானுக்கு 1,675 கிலோ தேயிலை அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

இதனையடுத்து லெபனானின் ஜனாதிபதி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையால் வழங்கப்பட்ட தேயிலையை இராணுவம் கையேற்றுள்ளது. அதனை படையினருக்கும்



ஜனாதிபதியின் பாதுகாவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்ட தேயிலையை ஜனாதிபதியின் பாதுகாவலர்கள் பகிர்ந்துகொண்டமை வெட்கக் கேடான செயல் என்று சமூக ஊடகங்கள் தமது விமர்சனங்களை வெளியிட்டுள்ளன. ஏற்கனவே கடந்த மாதம் ஆபிரிக்க நாடான மவுரித்டேனியாவால் இருந்து அனுப்பப்பட்ட 12 தொன் மீன்கள் தவறாக கையாளப்பட்டுள்ளன என லெபனான் அரசாங்கம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து லெபனான் இராணுவம் வெளியிட்ட பதிவில், மீன்கள் பொதுப் பாதுகாப்புத் தரங்களின்படி சேமித்து வைக்கப்பட்டுள்ளன எனக் கூறியிருந்தது. அவற்றைச் சமைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவேண்டும் என்று பல அமைப்புக்கள் கோரியுள்ளன என லெபனான் இராணுவம் தெளிவற்ற பதில் தெரிவித்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை, பெய்ரூட்டில் ஆகஸ்ட் 4ம் திகதி அமோனியம் நைட்ரேட் கிடங்கு வெடித்ததில் 190க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# கட்டாக்காலிகளாத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்படும்

*வேலணை பிரதேச சபை தவிசாளர் அறிவிப்பு!*

வேலனண, செப்.13

வீதியோரங்களில் திரியும் கட்டாக்காலிக் கால்நடைகள் வேலணை பிரதேச சபையால் பிடிக்கப்படும் என்றும் முற்கூட்டியே உரியவர்கள் அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் வேலணை பிரதேச சபைத் தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது பயிர்ச் செய்கை காலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பலதரப்பட்டவர்களிடமிருந்தும் எமக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் நாம் சமூக அக்கறையையும் கால்நடைகளினது பாதுகாப்பையும் கருத்தில் கொண்டே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதன்பிரகாரம் சபையால் கட்டாக்காலிகளாக வீதிகள், ஒழுங்கைகள் போன்றவற்றில் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டு ஒரு பொதுவான இடத்தில் பராமரிக்கப்படும். இவற்றை உரிமை கோரி யாராவது வரும் பட்சத்தில் பராமரிப்புச் செலவை அறவீடு செய்த பின்னர் கால்நடைகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்.

ஏனையவை ஒரு சிறிது காலத்தின் பின்னர் வேலணைப் பிரதேசத்திற்கு ட்பட்டவர்களுக்குப் பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படுவதுடன் அதன் மூலம் வரும் நிதியைக் கொண்டு நல்லின பால் மாடுகள் கொள்வனவு செய்யப்பட்டு வறிய நிலையில் உள்ளவர்களுக்கு வாழ்வாதாரமாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ப)

# இரு நாடு என்ற பேச்சுக்கு இலங்கையில் இடமில்லை

## யாழ். கட்டளைத் தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13

**இலங்கையில் இரண்டு நாடு, இரண்டு நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக வாழவேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்தார்.**



யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முதல்வரை நேற்றுச் சந்தித்தபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பதவியேற்ற பின் இன்றைய தினம் முதன்முதலாக இந்து மத குருவைச் சந்தித்திருக்கின்றேன். சந்திப்பில் மிகவும் ஆக்கபூர்வமானதாகப் பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து இருக்கின்றேன். யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியாகப் பதவியேற்றபின் இன்றைய தினம் முதன் முதலாகச் சென்று இந்து மதகுருவிடம் ஆசியினைப் பெற்றுள்ளேன்

இராணுவத்தினர் ஆகிய எமது பிரதான நோக்கம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதுமாகும். இந்த அரசாங்கமானது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பல்வேறு முன்மொழிவு களை மக்கள் சார்ந்து மேற்கொள்ள இருக்கின்றது.

யாழ் மாவட்ட கட்டளைத் தலைமையகமானது வடக்கு மக்களுக்கு உதவி செய்வதற்கும், இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும் துணை நிற்கும் அத்தோடு இப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தும். எமது பிரதேசத்தில் சமாதானம் முக்கியமானது. இலங்கையர் அனைவரும் ஒரு நாட்டவர்கள் தான் என்ற கொள்கைக்கு இணங்க நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வசித்து வருகிறோம். இங்கே இரண்டு நாடுமில்லை இரண்டு நிர்வாகமும் இல்லை. இரண்டு இராணுவ கட்டமைப்பு என்ற கதைக்கும் இடமுமில்லை. நாம் அனைவரும் இலங்கையர் என்ற ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் இங்கே பிரிவினை என்ற வார்த்தைக்கு இடமில்லை -என்றார். (ஐ-111)

# திலீபனின் நினைவு நாள்; ஜேர்மனியில் ஏற்பாடுகள்

யேர்மனி, செப்.13

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் தமிழ் இளையோர் அமைப்பினராலும் யேர்மனி மக்களவையினராலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் நோயான கொரோனா வைரஸ் தாக்கத்தின் எதிரொலியாக யேர்மனியில் மண்டபங்களில் மக்கள் கூடி நிகழ்வுகளைப் பெரிய அளவில் நடத்துவதற்கு தவிர்க்கப்பட்டுள்ள நிலையில், யேர்மனியில் உள்ள பன்னிரெண்டு நகரங்களைத் தெரிவுசெய்து நகரமத்தியில் கொரோனா விதிமுறைகளுக்கு அமைவாக இந்த நினைவு நிகழ்வு இடம்பெறவுள்ளது. 26.9.2020 சனிக்கிழமை யேர்மனியின் தலைநகரான பேர்லின் நகரத்தில் உள்ள பரிசப் பிளற்ஸ் என்னும் இடத்தில் அடையாள உண்ணாநோன்பும இதன்போது கடைப்பிடிக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வாள் வெட்டில் ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, செப்.13

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குரவில் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குரவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரு குழுக்களுக்கிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, அது கைகலப்பாக மாறியுள்ளது. இதனால் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தின் போதே ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சட்டவிரோதமாக மரம் அறுக்கும் இரண்டு குழுக்களுக்கிடையிலேயே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது. புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-19)

# மீண்டும் மீண்டும் அதிரும் கண்டி

கொழும்பு,செப்.13

கண்டி - திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் மற்றொரு சிறிய அளவிலான நில அதிர்வு நேற்றுப் பதிவாகியுள்ளது. ரிக்டர் அளவில் 1.79 ஆக நில அதிர்வு பதிவாகியுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி, ஹாரகம மற்றும் அநுரகம ஆகிய பகுதிகளில் நில அதிர்வு கடந்த வாரங்களில் பதிவாகின.

அந்தப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சுண்ணாம்புக்கல் அகழ்வு காரணமாகவே, இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதென பிரதேச மக்க ளும், சூழலியலாளர்களும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# காட்டு யானையால் தென்னைகள் அழிவு

வவுனியா,செப்.13

வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் சுமார் ஒரு ஏக்கர் அளவில் செய்கை பண்ணப்பட்ட தென்னை மரங்களை காட்டு யானைகள் அழித்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





பிரதேசத்தினுள் ஐந்துக்கு மேற்பட்ட காட்டு யானைகள் நேற்றுமுன்தினம் நுழைந்து ஒரு ஏக்கர் அளவிலான தென்னை, வாழை மரங்களை சேதமாக்கியுள்ளன. போரால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய இம் மக்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயம் மற்றும் தோட்டச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் கடந்த பல வருடங்களாகக் காட்டுயானைகளின் தாக்குதலால் தமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

என்றும், இப்பிரச்சினை காரணமாக யானை வேலியினை அமைத்துத்தருமாறும் பாதிக்கப்பட்ட மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-110)

# இரண்டு உப வீதிகளின் புனரமைப்புக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம்,செப்.13

யாழ்.மாநகர சபை 2 ஆம் வட்டாரத்துக்குட்பட்ட பிறவுண் வீதி 5 ஆம் ஒழுங்கை மற்றும் பிறவுண் வீதி மிருக வைத்தியசாலை ஒழுங்கை ஆகிய இரு உப வீதிகள் புனரமைப்புக்கு அடிக்கல் நடப்பட்டது.

மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந்தின் முன்மொழிவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

வீதிகள் புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மாநகரசபை உறுப்பினர் ப.தர்சா னந்த் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, அடிக்கல்லை நட்டார்.

நிகழ்வில் யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், மாநகரசபை உறுப்பினர்கள், கிராம சேவையாளர், வீதியில் வசிக்கும் பொது மக்கள் கலந்து கொண்டன. (க)

மதுபோதைக் குற்றச்சாட்டு;

## இளம் சட்டத்தரணிக்கு நீதிமன்று எச்சரிக்கை

வலிகாமத்தைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி ஒருவர் மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு தெல்லிப்பழை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் வீதிச் சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோது, கார் ஒன்றை வழிமறித்துள்ளனர். எனினும் அந்தக் கார் நிறுத்தாது சென்றதால் சந்தேகம் கொண்ட பொலிஸார், அதனைப் பின்தொடர்ந்து சென்று வழிமறித்தனர். காரைச் செலுத்திச் சென்றவர், தன்னைச் சட்டத்தரணி என்று பொலிஸாருக்கு அறிமுகம் செய்துள்ளார். எனினும் அவர் மதுபோதையில் இருக்கின்றமையை அறிந்து கொண்ட பொலிஸார், சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கோரியுள்ளனர். இலகுரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரமும் அந்த இளம் சட்டத்தரணியிடம் இல்லை. அதனால் அவர் மீது வழக்குப் பதிவு செய்வதற்கு பொலிஸார் தீர்மானித்தனர்.

கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணிக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. அவர் முற்பட்டார். எனினும் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்க மறுத்த சட்டத்தரணி, தான் சுற்றவாளி என்று மன்றில் தெரிவித்திருந்தார். எனினும் அவர் சாரதி அனுமதிப்பத்திரத்தை மன்றில் காண்பிக்கவில்லை.

அத்துடன் வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. கடந்த புதன் கிழமை மல்லாகம் நீதி பதியின் சமாதான அறையில் கூப்பிடப்பட்டு சட்டத்தரணி எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார். (ப-37)

## குழிக்குள் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, செப். 13

மாவத்தகம பகுதியில் நீர் நிறைந்த குழி ஒன்றில் விழுந்து 6 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். வீட்டின் அருகில் இருந்த குழி ஒன்றில் விழுந்தே அந்தச் சிறுவன் உயிரிழந்தான் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-இ)

# வனவிலங்குகளைப் பாதுகாக்க கடுமையான சட்டங்கள் வரும்!

### வனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

**வனவிலங்குகளின் பாதுகாப்பு தொடர்பாக கடுமையான சட்டங்கள் அடங்கிய புதிய வரைவு, இரண்டு மூன்று வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



மஸ்கெலியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், குறித்த புதிய வரைவு உடனடியாக அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும் சட்டவிரோதமாக வேட்டையாடினால் ஒரு லட்சம் ரூபா அபராதம் மற்றும் ஒரு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். அத்தோடு காடுகளுக்கு தீ வைத்தால் ஐந்து ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்றும் அமைச்சர் எச்சரித்தார். (ம-இ)

உற்பத்தியை அதிகரிக்க

## விதை நெல்லை சுத்தப்படுத்துக

யாழ்ப்பாணம், செப்.13

பெரும்போக நெற்செய்கையின்போது விவசாயிகள் தமது விளைச்சல் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் முகமாக விதை நெல்லை தற்போது தூற்றி சுத்தப்படுத்தி வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட விதை நெல்லை செய்கையாளர்கள் விதைப்பதற்குப் பயன்படுத்துவதே சிறந்தது என்று மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அம்பன், சாவகச்சேரி மற்றும் திருநெல்வேலியில் உள்ள சீக்கோ நிறுவனம் போன்ற இடங்களில் இந்த நெல்லை சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் உள்ளன. இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி விவசாயிகள் தமது விதை நெல்லை சுத்தப்படுத்த முடியும். பெரும்போக நெற்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் விதை நெல்லை உண்மையில் விவசாயிகள் சுத்தப்படுத்தி பயன்படுத்துவதன் மூலம் அதன் திறனை அதிகரிக்க முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-17)

## சீரற்ற காலநிலை இனியும் தொடரும்

கொழும்பு, செப். 13

இலங்கையில் தற்போது தொடர்ந்துவரும் சீரற்ற காலநிலை, எதிர்வரும் சில நாள்களுக்குத் தொடரும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-65 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

புத்தளத்தில் இருந்து மன்னார் வரையான கடற்பரப்புகளும் ஹம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

புத்தளத்தில் இருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.5 -3.0 மீற்றர் உயரம் வரை மேலெழும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எனவே, கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் -என்றுள்ளது. (ம-இ)

# 6 முஸ்லிம் அமைப்புக்களை தடை செய்யுமாறு பரிந்துரை

கொழும்பு,செப்.13

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்களை அடுத்து, 6 முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்களைத் தடை செய்யுமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் தேசிய உளவுச் சேவையிலிருந்து இந்தப் பரிந்துரைகள் கிடைக்கப் பெற்றன. அதில் மூன்று அமைப்புக்கள் தடை செய்யப்பட்டவை என்று முன்னாள் தேசிய உளவுத்துறை பிரதானி சிசிர மெண்டிஸ் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைத் தாக்குதல்களை மையப்படுத்தி, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஆணைக்குழுவில் இடம்பெற்று வருகின்றன.

இதில் தேசிய உளவுத்துறை முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ், ஆணைக்குழுவில் சாட்சியமளித்ததாவது,

தாக்குதல்களின் பின்னர் அடிப்படைவாத முஸ்லிம் அமைப்புக்களைத் தடை செய்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களே அதற்கு காரணமாகின.

அதற்கான நடவடிக்கைகளை நானே எடுத்தேன். இதன்போது இராணுவ புலனாய்வுப் பிரிவு 3 அடிப்படைவாத அமைப்புக்களையும், தேசிய உளவுச் சேவை 3 அடிப்படைவாத அமைப்புக்களையும் பெயரிட்டு அனுப்பின.

அதனடிப்படையில் கடந்த 2019 மே 7 ஆம் திகதி தேசிய தௌஹீத் ஜமா அத், ஜமாத்தே மில்லத்தே இப்ராஹீம் மற்றும் விலாயத் அஷ் ஷெய்லானி ஆகிய அமைப்புக்களைத் தடை செய்ய அப்போதைய ஜனாதிபதி செயலாளர் ஆர்.செனவிரத்னவுக்குப் பரிந்துரைத்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அந்த அமைப்புக்கள் தொடர்பில் தேசிய உளவுச் சேவை பிரதானியிடம் மீள ஆய்வு செய்து அறிக்கை கோரிய போது, அவ்வமைப்புக்கள் தாக்குதலுடன் எவ்வித நேரடித் தொடர்புகளையும் கொண்டிருக்காமை உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு தடை செய்யப்படுவதற்கான பரிந்துரையில் உள்ளடக்கப்படவில்லை. எனினும் அம்மூன்று அமைப்புக்களையும் தீவிர கண்காணிப்பில் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது- என்றார். (க-இ)

## கோடாவுடன் ஒருவர் கைது

கொடிகாமம், செப். 13


இரண்டு பரல் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-159)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வாதிகார ஆட்சிக்கு இனியும் இடமளியோம்

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு



கொழும்பு,செப்.13

நாட்டில் மீண்டுமொரு சர்வாதிகார ஆட்சிக்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நிறைவேற்று அதிகார முறைமையை இல்லா தொழிக்க வேண்டும் என்றே நாட்டில் இதுவ ரையான காலமும் போராட்டங்கள் இடம் பெற்றன. இதனால் தான் 19 ஆவது திருத்தச் சட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் நல்லது கெட் டது என இரண்டும் உள்ளன.

இதிலுள்ள பிழைகளை நிவர்த்தி செய்து நாம் முன்னோக்கித் தான் செல்ல வேண்டும். ஆனால், இதனை விடுத்து, மீண்டும் சர்வாதி கார ஆட்சிக்கு செல்லவே அரசு முயற்சிக்கிறது. இதற்கு நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம். என்றார்.

19 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டுமென அரசில் அங்கம் வகிக்கும் சிலர் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

இதற்கிடையில் ஏனைய பல கட்சிகள் 19 ஆவது திருத்தச்சட்டத்தை ஒருபோதும் நீக்கக் கூடாது. அதில் சிறுபான்மையினரின் பாது காப்பு உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட் டுள்ளன என்று தொடர்ந்து வலியுறுத்தி வரு கின்றன. (க-இ)

# தியாகத்தின் மீதான வங்குரோத்துத்தனம்

உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தால் திலீபன் உயிரிழக்கவில்லை. அவர் ஒரு நோயாளி. நோயாளி என்பதால்தான் அவர் உயிரி ழந்தார். திலீபன் ஒரு நோயாளி என்பதால்தான் பிர பாகரன் அவரை உணவு ஒறுப்புக்காக அனுப்பினார் என்று தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன.

கண்டி - போகம்பரை சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்ற அவர் அங்கு ஊடகவியலாளர்களுக்குக் கருத் துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அத்துடன் திலீபன் ஒருவரே உணவொறுப்பில் ஈடு பட்டு உயிரிழந்தவர். அவரைத் தவிர வேறு எவரும் உணவொறுப்புப் போராட்டத்தால் உயிரிழக்க வில்லை என்றும் கமால் குணரட்ன தெரிவித்துள் ளார்.


புலிகளில் எத்தனையோ மாவீரர்கள் தம் இனத்தின் விடிவுக்காக தமது இன்னுயிரை துச்சமென நினைத்து ஆகுதி ஆக்கியுள்ளனர். எனினும் அவர்களுக்கும் தியாகி திலீபனுக்கும் இடையில் பெரும் வேறுபாடு உள்ளது. அகிம்சை வழியில் அவரது போராட்டம் அமைந்தது. ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இறக்கும் வரையில் உணவொறுப்பை அறி வித்து தான் கொண்ட கொள்கையில் பற்றுறுதியுடன் நின்று தன் இன்னுயிரை தமிழ்த் தேசத்தின் விடிவுக் காக அவர் அர்ப்பணித்தார். அந்த ஒப்பற்ற தியாகத் துக்கு ஈடாக தமிழ் மக்கள் இதுவரை வேறெதையும் கருதவில்லை. அவ்வாறான ஒரு தியாகச் செம்மலின் செயற்பாட்டை - அர்ப்பணிப்பை கொச்சைப்படுத் துவதற்கு கமால் குணரட்னவுக்கு எந்த அருகதையும் கிடையாது. போர்த் தந்திரி என்ற அடிப்படையில் அபுசார் கருத்துக்களை முன்வைப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு உரிமையுண்டு. ஆனால் தியாகத்தின் திருவுருவத்துக்கு எதிராக எவ்வித விச மக் கருத்தை முன்வைப்பதற்கும் குறைந்த பட்ச உரி மைகூட அவருக்குக் கிடையாது.

அத்துடன், திலீபனைத் தவிர வேறு எவரும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிரிழக்க வில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அனைத் துத் தமிழர்களின் விடிவுக்காக அன்னை பூபதி வெறும் நீராகாரத்துடன் இருந்து உயிர்துறந்தமையும் இந்த நாட்டின் கறுப்புப் பக்கங்களில் ஒன்று என்பது கமாலுக்குப் புரியவில்லை - தெரியவில்லை. ஒரு கருத்தை வெளிப்படுத்த முதல் அதன் உண்மைத் தன்மையையும் கனதியையும் ஆராய்ந்து சிந்தித்து வெளிப்படுத்துவதுதான் சரியான நகர்வாக இருக் கும்.

அதேநேரம் சில கோரிக்கைகளை முன்வைத்து பூஸா சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபடும் கைதி களை எள்ளி நகையாடி இருக்கின்றார் கமால் குண ரட்ன. 'இந்த நாட்டிலுள்ள பயங்கர குற்றவாளிகளே பூஸா சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர் களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நியாய மானவை எனில் அவை நிறைவேற்றப்பட்டிருக்கும். அநீதியான கோரிக்கைகள் எனில் அவற்றை ஒருபோ தும் நிறைவேற்றமுடியாது. பட்டினி அதிகரிக்கும் போது உண்ணாவிரதப் போராட்டத்தை ஏதேனும் விதத்தில் கைவிட்டுவிடுவார்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார் அவர். சிறைக் கைதிகள் என்பதற் காகத் தமது கோரிக்கைகளை வெளிப்படுத்துவதற்கு அவர்கள் தகுதி அற்றவர்கள் என்று பொருள் அல்ல. அவர்களுக்கு என்றும் உரிமை - சுதந்திரம்-கருத்து வெளிப்பாடு என்பன உள்ளன. அவர்களின் கோரிக் கைகள் கமால் குணரத்ன சொல்வதைப்போன்று நிறைவேற்றப்பட முடியாததாக இருந்தாலும், அதைக் கையாள்வதில் ஒரு பக்குவம் வேண்டும்.

## பழைய முறையிலேயே அரசின் ஆட்சி தொடரும்

### ரனவீர கூறுகிறார்



கொழும்பு,செப்.13

இந்த அரசு சர்வா திகார ஆட்சியை நோக்கி நகர வில்லை என்று கிராமிய கைத் தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச் சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது.

1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த் தன அறிமுகப்படுத்திய அரசமைப்பில் தான் ஆட்சியமைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ என அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் இந்த முறைமையில் தான் ஆட்சி செய் தார்கள்.

எனவே, நாம் புதிய பயணமொன்றுக்குச் செல்ல முற்படவில்லை. பழைய முறை யில் ஆட்சி செய்யவே முனைகிறோம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (க-இ)

## சிறுவனை தரையில் தூக்கியடித்தவர் கைது

கொழும்பு,செப்.13

பாடசாலை மாணவனை தரையில் தூக்கி அடித்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒரு வரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொகவந்தலாவ பிரதேசத்தில் தமிழ் பாட சாலை ஒன்றில் 5ம் தரத்தில் கல்வி பயிலும் 10 வயதான இரண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட சண்டை காரணமாக, மாணவனின் தந்தை காயமடைந்துள்ளார். அவர் தாக்குதல் நடத்திய மாணவனின் வீட் டுக்குச் சென்று மாணவனைத் தூக்கி தரை யில் அடித்துள்ளார். சம்பவத்தில் காயம டைந்த மாணவன் பொகவந்தலாவ மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலைக்குள் மாணவர்களுக்கு இடை யில் ஏற்பட்ட சண்டையின் பின்பு பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் இருவரையும் கண்டித்து வீட்டுக்கு அனுப்பியுள்ளனர். இத னையடுத்தே மாணவனின் வீட்டுக்கு சென்ற சந்தேகநபர் மாணவனைத் தாக்கியுள்ளார்.

பொகவந்தலாவ பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் (க-இ)

# தேசியப்பட்டியல் விவகார தாமதம்; மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியே

கொழும்பு, செப். 13

நாடாளுமன்றத்திற்கு செல்லவிருக்கும் தேசி யப் பட்டியல் பிரதிநிதிகளின் பெயரை வெளியி டுவதில் ஏற்படும் தாமதம் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் எங்கள் மக்கள் சக்தி யும் இன்னும் தங்கள் கட்சிகளுக்கான தேசிய பட்டியல் பிரதிநிதிகளின் பெயரை வெளியிட வில்லை.

இந்த விடயம் குறித்து கருத்துத் தெரிவித் துள்ள தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, கட்சிக்குள் அதிகாரப் போராட்டங்கள் ஏமாற்றமளிப்பதாக தெரிவித் தார்.

மேலும் நாட்டிற்கான சேவையின் எதிர்பார்ப்பு டன் பொதுமக்கள் ஐக்கிய தேசியக் கட்சி மற் றும் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு வாக்களித் தனர் என்றும் குறிப்பிட்டார். இந்த விடயங்கள் காரணமாகவே அரசியல் தொடர்பாக பொது மக்களுக்கு பெருகிய ஏமாற்றம் காணப்படுவ தாகவும் மஞ்சுள கஜநாயக்க சுட்டிக்காட்டி னார். (ம-இ)



# புங்குடுதீவு, பெருங்காடு கோயில் வயல்

## திருவருள் அனுக்கிரஹம் மிகுந்த ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

## புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

திருச்சிற்றம்பலம்

"பூவிலுயர் வளர்மருவு புங்கைநகர் மானெழுவம் பொலிந்த செந்நெல்
கோயில் வயலெழுந்தருளி குலமுறையாலெமை யாண்டு கொண்டுபூத்த
காவிமலரனைய திருக்கடையுலக மெலாங்களிக்க காக்குந்
தேவி மகா மாரியிரு செம்பதுமந் துணைப் பதங்கள் சிந்தை செய்வோம்"

திருச்சிற்றம்பலம்

**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மெய்யன்பர்களே!**

இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணம் பகுதியில் சைவ சித்தாந்த பண்பு நிறைந்த புங்குடுதீவு திவ்ய ஷேத்திரத்தில் வயல் சூழ் நாயகி, கோயில் வயல் நாமம் கொண்ட ஆதிசக்தி. மூர்த்தி, தலம், தீர்த்தம் அமையப் பெற்ற அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ மகா கும்பா பிஷேம் நிகழும் மங்களமிகு சார்வரி வருடம் ஆவணி மாதம் 29 ஆம் நாள் (14.09.2020) திங்கட் கிழமை துவாதசி திதியும் பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 6.00 மணிமுதல் 7.00 மணி வரையுள்ள சிங்க இலக்கண சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் பரிவார மூர்த்திக் கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது எனவே இப் பெருவிழாவில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து தொண்டுகள் பல செய்து திருவருள் பெற்று ஆனந்தமான வாழ்வு வாழவேண்டுகின்றோம்.

### எண்ணெய்க்காப்பு

இன்று (13.09.2020) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

### கும்பாபிஷேகம்

நாளை (14.09.2020) திங்கட்கிழமை

விநாயக வழிபாடு, யாகபூஜை, ஹோமம், மகா பூர்ணாகுதி, தீபாராதனை, கும்பங்கள் வீதி பிரதட்சனம், மஹாகும்பாபிஷேகம், பரிவர்த்தன மூர்த்திகள் அபிஷேகம், தசமங்கள தர்சனம் நடைபெறும்.

### கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துவோர்




ABI
Fashion World
Largest Textile SHOWROOM in Jaffna
சுப முகூர்த்த பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்ஜம்
Ground Floor-Saree & Salwar Collection
1st Floor - Kids & Ladies Collection
2 Floor - Gents Collection
4th Floor - Wedding Saree Collection
No.112 K.K.S Road, Jaffna.
Tel: 021 222 3738
f abifashionworld

மயூரா அன்பளிப்பகம்
MAYOORA
Gift Centre & Distributers
No. 14, New Market,
Power House Road, Jaffna.
T: 021-222 2084



ESS JEY ELECTRICALS
(Wholsale & Retail)
Dealers in Electrical Goods & Distributors
No : 09, Stanly Road, Jaffna.
T.P No : 021 222 2564
021 222 7430 Fax No: 021 222 6089
Email : essjeyelectricals@gmail.com

SUN WEDDING CARDS
இரு மனங்கள் ஒரு மனமாய் இணையும் உங்கள் வாழ்வின்
மறக்க முடியாத அற்புத பந்தத்தின் மகிழ்ச்சியான உங்கள்
திருமண வாழ்வு எங்கள் எழில்மிகு மங்களகரமான
திருமண அழைப்பிதழ்களோடு ஆரம்பிக்கட்டும்.
அனைத்து மதத்தினருக்கும் சகல வைபவங்களுக்குமான
அழைப்பிதழ்கள் உங்கள் எண்ணத்தில் உதித்தவையாது
காட்சியறையில் ரகங்கள் பலவிதம்... தரத்தில் முதலிடம்...
உங்கள் வாழ்வோடு இணைந்தது.
No.44A, 1st Floor,
ASri Kathiresan Street, Colombo-13.
Tel: 0112433641, 0112334287
Mobile: 075 8000 995 E-mail: sunwc@live.com

சிந்திவிநாயகர் களஞ்சியம்
COIR MERCHANT
&
COMMISSION AGENT
66,67, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

கபிலா KABILA
SHOE PALACE
The Finest Footwear for the Active Lifestyle...
24 Kasthuriyar Road, Jaffna
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel.021-2223097
Branch:
13. Power House Road.
New Market, Jaffna.
Tel: 021-2227950

# தவணைப் பரீட்சைகள் 2 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.13

**பாடசாலைகளின் இரண்டாம் தவணை பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தரம் 2 இலிருந்து தரம் 10 வரைக்குமான இப்ப ரீட்சை வலய மட்டத்தில் நடைபெறுபெறவுள்ளது.

மாணவர்களின் தற்போதைய நிலையை அறிவதற்கும் அவர்களை கற்றலில் உற்சாகப்படுத்தலுக்கும் ஏற்ற வகையில் வினாத்தாள்கள் தயாரிக்க திட்டமிடப்பட வேண்டும்.

தரம் 11 க்கு வினாத்தாள்கள் மாகாண மட்ட பொதுப் பரீட்சையாக திட்டமிடப்பட்டு வினாத்தாள்களும், புள்ளித்திட்டங்களும் மென்பிரதிகளாக வலயங்களுக்கு வழங்கப்பட உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் நாளை திங்கட்கிழமை கடிதம் மூலம் அறிவிக்கப்படும் என்றார். (ஐ-422)

## போதையில் சாரத்தியம் ; 10 பேருக்கு தண்டம்

கொடிகாமம்,செப்.13

மது போதையில் வாகனம் செலுத்திய சாரதிகள் 10 பேருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-159)



## திறன்வகுப்பறை திறப்பு

கிளிநொச்சி,செப்.13

கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலயத்தில் திறன் வகுப்பறை ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் பழைய மாணவர்களான அ.பிறேமானந், அ.ஞானானந், அ.கணேசானந் மற்றும் அ.தேவானந் ஆகியோர் தமது தாயாரான அந்தோனிப்பிள்ளை தேவியம்மாவின் நினைவாக இவ் வகுப்பறையை அமைத்து வழங்கியுள்ளனர்.

அத்துடன் போக்குவரத்து தேவையுடைய மாணவிக்கு சைக்கிள் ஒன்றும் வழங்கப்பட்டது.

இதேவேளை "திருவையாறு இரணைமடு மண்சுமக்கும் வேர்கள்" அமைப்பினால் பாடசாலையின் பயன்பாட்டுக்கு போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் இசை துறைக்கான வயலின் என்பன வழங்கப்பட்டன. (ஐ-222)

## குப்பை கொட்டியவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு

சாவகச்சேரி,செப்.13

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இரவோடிரவாக குப்பை கொட்டிய மூவரை பொலிஸார் இனங்கண்டு அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீதியோரங்களில் குப்பை கொட்டுவதற்கு சாவகச்சேரி பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் காணப்படும் குப்பைகளை உக்கக்கூடிய மற்றும் உக்காத கழிவுகளைத் தரம் பிரித்து தமது வளவுக்குள் வைத்திருந்து குப்பை அகற்றும் வாகனம் வரும் வேளையில் அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

வீதியோரங்களில் குப்பை காணப்பட்டால் வீட்டின் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் குப்பை கொட்டப்பட்டுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அங்கு சென்று விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குப்பை கொட்டியவர்களை இனங்கண்டு அவர்கள் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். (ஐ-9)



## பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

பொன்னாலை,செப்.13

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீகண்ணன் அன்னதான மடாலயம் மாணவர்களுக்கு இடையே போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இந்த பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மடாலயத்தின் தற்காலிக மண்டபத்தில் நடைபெற்றது.

மடாலய தலைமை ஒருங்கிணைப்பாளர் ந.பொன்ராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சித்தியடைந்த நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பரிசாக வழங்கப்பட்டன.

அத்துடன் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில், கீரிமலை மெய்கண்டார் ஆதீன முதல்வர் உமாபதிசிவம் அடிகளார், வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் எஸ்.விஜயேஸ்வரன், ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை அதிபர் தி.மோகனபாலன், பொன்னாலை கிராம அலுவலர் ப.தீசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

## கடன் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு

வவுனியா,செப்.13

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு நேற்று வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நேர்முகத்தேர்வு அரச வங்கியின் ஊடாக வழங்கப்படும் சுயதொழில் இழப்பீடு அலுவலகத்தின் உதவிப்பணிப்பாளர் திஸ்சநாயக்க, மாவட்ட உதவி பிரதேச செயலாளர் மற்றும் வங்கி முகாமையாளர்களால் நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இருந்து சுயதொழில் கடனுக்கு விண்ணப்பித்த 230பேர் பங்குபற்றினர்.

போரால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாகவும், பொதுமக்களின் சுயதொழில் செயல்பாட்டை அதிகரிப்பதற்காகவும் குறைந்த வட்டி வீதத்தில் இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (ஐ-18)





## உடுப்பிட்டி தொகுதியில் 5 வீடுகள் கையளிப்பு

கொடிகாமம்,செப்.13


கிராமத்துக்கு ஒரு வீடு எனும் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி தொகுதியில் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே/350, ஜே/378, ஜே/379, ஜே/380 மற்றும் ஜே/387 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 5 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன

ஒவ்வொரு வீடும் 6 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளன. தொழிலதிபர் வின்சேந்திரராஜா பயனாளிகளிடம் வீடு கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் வல்வெட்டித்துறை நகரசபையின் சுதந்திரக் கட்சி உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் உடுப்பிட்டித் தொகுதி இணைப்பாளருமான இனியவன், இளைஞர் அமைப்பினர் மற்றும் பொது மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-159)

## உடைமையில் கசிப்பு; ரூ.25,000 தண்டம்



சாவகச்சேரி,செப்.13

750 மில்லி லீற்றர் கசிப்பு உடைமையில் வைத்திருந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றால் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

### 4 மணி நேரத்தில்

## 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

வவுனியா, செப். 13
வவுனியா நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட 4 மணி நேர வீதிச் சோதனை நடவடிக்கையின் போது விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி திஸாநாயக்க தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இவ் விஷேட நடவடிக்கையில் 28 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்கள் விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளனர். முக்கியமாக மது போதையில் வாகனம் செலுத்தினர் என ஆறு சாரதிகளுக்கும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தினர் என மூன்று பேருக்கும் எதிராக எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தலைக்கவசமின்மை, போக்குவரத்தின்போது கைத்தொலைபேசிப் பாவனை, காப்புறுதிப்பத்திரம் மோட்டார் ஆவணம் இன்மை போன்ற குற்றங்களுக்காக ஏனைய 40 பேரிடம் தண்டப்பணம் அறிவிடப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்து நகரில் முன்னெடுக்கப்படவுள்ளன. சாரதிகள் பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். (ஐ110)

# வயல் காணிகளுக்குள் மழைநீரை சேகரியுங்கள்

## வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், செப்.13**
**பெரும்போக நெற்செய்கைக்கு முன்பாக விவசாயிகள் தமது வயல்களின் வரம்புகளைக் கட்டி சீராக்கி மழை நீரை தேக்கி வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்முறை கிட்டத்தட்ட 11 ஆயிரத்து 800 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.
மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் இதைப் பயன்படுத்தி பரவலாக செய்கையாளர்கள் தமது வயல்களை உழுது சீர் செய்து வருகின்றனர்.
இந்த ஆண்டில் சராசரி மழை வீழ்ச்சி செப்ரெம்பரில் அதாவது



இந்த மாதத்தில் அதிகரித்துக் காணப்படும். அத்துடன் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் மழைவீழ்ச்சி படிப்படியாகக் குறைந்தே காணப்படும்.
இவ்வாறு விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவும் தெரிவித்துள்ளது.
தற்போது மாரி மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் விவசாயிகள் தமது வயல்களின் வரம்புகளைக் கட்டி கூடுதலாக மழை நீரையும் சேமித்து வைக்க வேண்டும். மழை நீரை சேமித்து வைப்பதன் ஊடாக விளைச்சலையும் அதிகரிக்க முடியும். என்றார். (ஐ-17)

## போதையில் சாரத்தியம் : ரூ.3,60,000 ஆயிரம் தண்டம்

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்திய 10 பேருக்கு 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொலிஸாரால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.
மதுபோதையில் ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு முறையே 82 ஆயிரத்து 500 ரூபா, 77 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், மது போதையில் வாகனம் செலுத்திய ஆறு பேருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

### நூல் வெளியீடு

சாகித்திய ரத்னா பேராயர் கலாநிதி எஸ். ஜெபனேசன் எழுதிய "அமெரிக்காவிலிருந்து பாய்ந்த அன்பு வெள்ளம்" எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.
எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை சென்ஜோன்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஐ-50)



## மணிவிழா நிகழ்வு

கரணவாய்,செப்.13
உடுப்பிட்டி அ.மி கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் சி.கிருஸ்ணகுமாரின் மணிவிழா நிகழ்வு நேற்று கல்லூரியின் சிதம்பரப்பிள்ளை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.
கல்லூரி நலன்புரிச்சங்கத் தலைவர் கே.தர்மதேவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விழா நாயகன் உடுப்பிட்டி சந்தி பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற விசேடபூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மாணவர்களின் மேலைத்தேய வாத்திய இசை சகிதம் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.
தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது. மங்கள விளக்கை வித்தியால பிரதி அதிபர் விஜயகுமார், வடமராட்சி வலய ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர்களான சி. புஸ்பலிங்கம், வை.ரவீந்திரன் ஆகியோரும், கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர்களான க.தர்மலிங்கம், என். அனந்தராஜ், கி. நடராசா உட்பட பலரும் ஏற்றினர்.
விழா நாயகனை கௌரவிக்குமுகமாக "கிருஸ்ண வசந்தம்" என்னும் நூல் வெளியிடப்பட்டது.
நூலின் வெளியீட்டுரையை ஆர். தேவகி நிழ்த்தினார்
தொடர்ந்து கிருஸ்ண வசந்தம் என்ற நூலை பழைய மாணவனும் ஓய்வு நிலைக்கல்விப் பணிப்பாளருமான யோ.ரவீந்திரன் வெளியிட்டு வைக்க விழா நாயகனின் தாயார் திருமதி சுப்பிரமணியம் கிருஸ்ணம்மாள் பெற்றுக் கொண்டார். (ஐ-108)

## பிப்பிலி வீதியின் சீரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.13
யாழ்ப்பாணம், நவாலி வடக்கு பிப்பிலி வீதி மறுசீரமைப்புக்கான முதல் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதன்தொடர்ச்சியாக இரண்டாம் கட்ட சீரமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நவாலி வடக்கு பிப்பிலிவீதியின் நீளம் 2.38 கிலோ மீற்றராகும். இரண்டு கட்டங்களாக அந்த வீதி மறுசீரமைக்கப்படவுள்ளது. சீரமைப்புப் பணி முடிவுற்று சிறிது காலத்தின் பின்னர் நவாலி வடக்கு பிப்பிலி வீதி காப்பற் வீதியாக மாற்றப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் மேற்கொண்டுள்ளார். (ப-50)

### மத்தள ஊடாக வந்தால் வரிச் சலுகை

மத்தள விமான நிலையத்தின் ஊடாக பொருள்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு விசேட வரிச் சலுகைகள் உள்ளிட்ட சில சலுகைகள் வழங்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மத்தள விமான நிலையத்தின் பணிப்பாளர் இதனை தெரிவித்துள்ளார். மத்தள விமான நிலையத்தின் ஊழியர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஆசிரியையின் தாலி அறுப்பு

### ஆரையம்பதியில் சம்பவம்

மட்டக்களப்பு, செப். 13
உறக்கத்தில் இருந்த ஆசிரியையின் கழுத்திலிருந்த தாலி கத்தி முனையில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் நேற்று அதிகாலை ஆரையம்பதி பகுதியில் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
ஆரையம்பதி பிரதான வீதியிலுள்ள பாடசாலை ஆசிரியையான பெண் தனது வீட்டில் கணவர் மற்றும் பிள்ளைகளுடன் உறக்கத்தில் இருந்த பொழுது அதிகாலை 4 மணியளவில் படுக்கையறைக்குள் நுழைந்த கொள்ளையன் குறித்த பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து தாலியைப் பறித்துள்ளான். அப்பெண் கூச்சலிடவே அங்கிருந்து தப்பித்துச் சென்றான். வீட்டு முன் வாசல் வழியாகத் தப்பித்த கொள்ளையன் வீட்டின் பிரதான கதவுக்கு பூட்டு போட்டு பூட்டி அங்கிருந்து தப்பித்துள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர். சுமார் 11 பவுண் எடையுள்ள தாலி இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-46)

# இவ்வாண்டு யாழில் 260 காச நோயாளர்!

கொழும்பு, செப்.13

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த ஆண்டு 260 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மட்டும் 160 காச நோயாளர்கள் யாழ் மாவட்டத்தில் இனங்காணப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இந்த வருடம் 260 காச நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். கொரொனாவுக்குப் பின்னர் இருமல் அறிகுறியுடையவர்கள் வைத்தியசாலைக்கு வருவது குறைவடைந்துள்ளது.

50 பேருக்கு மேல் காச நோய் இனங்காணப்படாமல் உள்ளார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிலும் காச நோய்க்குரிய சிகிச்சைகள், சளிப் பரிசோதனை செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை காச நோயாளர்களுக்கான பிரத்தியேக வைத்தியசாலை மயிலிட்டியில் அமைவது நல்லது. அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மூலம் மேற்கொள்ள வேண்டும். உலக சுகாதார நிறுவனமும் பொதுமக்களும் கொவிட் 19 பாதிப்பிலிருந்து படிப்பினையாக கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

சுவாச தொற்று நோய்களைத் தடுப்பதற்குரிய பிரத்தியேக வைத்தியசாலையை மயிலிட்டியில் அமைப்பதற்கான நடவடிக்கையை மாவட்டச் செயலரின் உதவியுடனும், வடமாகாண ஆளுநரின் உதவியுடனும் மேற்கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் கடந்த 30 வருடங்களாக கிடப்பில் போடப்பட்டுள்ளது

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் கண்ட வெற்றியை காச நோயாளர்களையும் கண்டறிந்து கட்டுப்படுத்துவதகு பி.சி.ஆர். கருவியைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

கொரோனாத் தொற்றின் பின்னர் காச நோய் கண்டறிதல் வீதம் குறைந்துள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று நோயாளிகள் வைத்தியசாலைக்கு வராமல் இருக்கலாம், அல்லது முகக் கவசம் அணிவதால் காசநோய் தொற்று குறைவடை ந்திருக்கலாம்- என்றார். (எ-111)

# வெளி மாவட்டத்தவர்களுக்கு மாங்குளத்தில் காணிகள்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் நடவடிக்கை

முல்லைத்தீவு, செப்.13

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள மாங்குளம் பகுதியில் வவுனியா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு 200 ஏக்கர் காணியினை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணி இல்லாத நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். மாங்குளம் பகுதியில் எந்தவித அறிவித்தலும் இன்றி வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 29 பேருக்கு 200 ஏக்கர் காணிகளை வழங்க ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் தீர்மானித்துள்ளது. இதற்கான காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலத்தில் நடைபெற்று, காணிகளைச் கோரியவர்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

எனினும் காணிவழங்கும் நடவடிக்கைக்கு மாங்குளம் பிரதேச மக்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (ப-19)



இ.போ.சவின் வவுனியா சாலைக்கு இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்சிலி ரணவக்க நேற்று வருகை தந்தார். இதன்போது இ.போ.சவின் வவுனியா சாலையின் உத்தியோகத்தர்கள் சாரதிகளது மற்றும் நடத்துனர்களுடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றிருந்தது. வவுனியா சாலை உத்தியோகத்தர்கள், சாரதிகள், காப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக அவர் கேட்டறிந்ததோடு வவுனியா சாலையின் எதிர்கால நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-110)

# களிமண் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்!

கொழும்பு, செப்.13

களிமண் உற்பத்திகளின் அளவை அதிகரிக்கவும் அதன் விலையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

பியகம பகுதிக்குச் சென்ற அவர் அங்குள்ள மட்பாண்ட உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-இ)

# மணல் ஏற்றியவர் பொலிஸாரால் கைது

வல்வெட்டித்துறை, செப்.13

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை இமையாணன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீதியால் சென்ற டிப்பரை சோதனை செய்த போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டிப்பர் வாகனம் பொலிஸ் நிலையம் கொண்டுசெல்லப்பட்டது. சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. டிப்பர் வாகனம் பொலிஸ் நிலையத்தில் வழக்கு சான்றுப் பொருளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ப-26)

# நாமலுக்கு ஆண் குழந்தை

கொழும்பு, செப். 13

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் பிரதமரின் புதல்வருமான நாமல் ராஜபக்சவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி நாமல், லிமினி தம்பதியர் திருமண பந்தத்தில் இணைந்தனர். அவர்களின் திருமண ஓராண்டு நிறைவு நாளான நேற்று அவர்களுக்கு ஆண் குழந்தை பிறந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# மானிய உர வகைகள் வழங்க டோக்கன்கள்

சாவகச்சேரி, செப்.13

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உர வகைகள் பெறுவதற்கான டோக்கன்கள் நாளை திங்கட்கிழமை கோவிலாக் கண்டி மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் வழங்கப்படுமென அமைப்பின் செயலாளர் ச.புஷ்பாகரன் அறிவித்துள்ளார் .

விவசாயிகள் காணிக்கான இலக்கம், இவ் வருடச் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு, கமநல சேவைகள் நிலையத்தில் ஏக்கர் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் அறிவித்துள்ளார்.

இதேவேளை கைதடி-நாவற்குழி கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரவகைகள் பெறுவதற்கான டோக்கன்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் விநியோகிக்கப்படுமென அமைப்பின் தலைவர் ஐ.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ப-9)

# பாதுகாப்பு ஆலோசகரை பதவி விலக்க கோரிக்கை

கொழும்பு, செப்.13

இலங்கைக்கான பிரிட்டன் பாதுகாப்பு ஆலோசகரை கைதுசெய்யக் கோரி புலம்பெயர் தமிழர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டமானது அந்த நாட்டு பிரதமர் அலுவலகத்தின் முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 25 பேர் வரை கலந்து கொண்டிருந்தனர். (எ-இ)

# போக்குவரத்து நடைமுறைகள் மீண்டும் நடைமுறைக்கு

கொழும்பு, செப்.13

போக்குவரத்து விதிமுறைகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி விதிமுறைகளை மீண்டும் நடைமுறைக்கு கொண்டுவருவோம் என்ற தொனிப் பொருளின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

காலி வீதி அதிவேக பாதைகள் உள்ளிட்ட பல பாதைகளை மையப்படுத்தி இந்த நடைமுறை முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது. (எ-இ)

# ஆடு வெட்டிய நால்வர் கைது

வல்வெட்டித்துறை, செப். 13

ஆலய வேள்வியில் விற்ற ஆட்டை வீட்டுக்குக் கொண்டு சென்று அனுமதிப்பத்திரம் இன்றி இறைச்சியாக்கியமை, விற்பனைக்காக இறைச்சியை தம் உடைமையில் வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளில் இரு வேறு இடங்களில் நால்வர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


ஆலய வேள்வியில் விற்கப்பட்ட ஆடு வீடுகளில் இறைச்சியாக்கப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இமையாணன் மற்றும் மாவடியைச் சேர்ந்த 49,28,35,26 வயதுகளை உடைய நால்வரே இவ்வாறு நேற்றுக் காலை கைதுசெய்யப் பட்டனர். அவர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப் பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-26)

# சட்டவிரோத மீன்பிடியைக் கண்டித்து வடமராட்சியில் உணவொறுப்பு போர்

**யாழ்ப்பாணம், செப். 13**

**வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்ட விரோத மீன்பிடி, கடலட்டை தொழில்களில் பிற மாவட்ட மீனவர்கள் ஈடுபடுவதால் தமது மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர் என்று தெரிவித்து எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம் காலவரையறை இன்றிய உணவொறுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளாளோம் என வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.**


வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சங்கங்களுடனான சந்திப் பின் பின்னரே வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசத் தலைவர் சண முகநாதன் இந்த அறிவிப்பை விடுத்தார்.
சட்டவிரோத கடற்றொழில்களை உடன் நிறுத்தி பிரதேச மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமலிரு க்க நடவடிக்கை எடுக்குமாறு மீன் பிடி அமைச்சரைக் கோரியும் இது வரை எந்தவிதமான நடவடிக்கை யும் எடுக்கப்படாதமையாலே இந்த உணவு ஒறுப்பு மேற்கொள்ளப்பட வுள்ளது என்றும் அவர் தெரிவித் தார். (ம)



## பாகுபடின்றி வீட்டுத்திட்டம்

*திலீபன் எம்.பி தெரிவிப்பு*

வவுனியாவில் பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் புதிய வீட்டுத் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவ ருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.
வீடமைப்புத் திட்ட இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவுடன் கொழும்பில் உள்ள அமைச்சு அலு வலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என அவர் தெரி வித் தார்.
இதன்போது, வன்னியில் வீடில்லாத மக்களுக்கு பாகுபாடின்றி புதிய வீட்டுத் திட்டம் வழங்க வேண்டும் எனவும், கடந்த காலங்களில் கட்டப்பட்டு நிலுவையில் உள்ள வீட்டுத்திட்டங்களை கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டது. இதனை, ஏற்றுக் கொண்ட அமைச்சர் விரைவில் வவுனியாவுக்கு விஜ யம் செய்து வீட்டுத்திட்ட பிரச்சனைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன் எனவும் உறுதியளித்துள் ளார் என திலீபன் மேலும் தெரிவித்தார். (வ-18)



## நீயூ டைமன்ட் கப்பல் பணியாளர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு

கொழும்பு, செப்.13

எம்.ரி நீயூ டைமன்ட் கப்பலின் கப்டன் உட்பட 23 பணியாளர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்யு மாறு கொழும்பு தலைமை நீதிவான் குற்றப்புலனா ய்வுத் துறைக்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.
இந்நிலையில் கப்பல் களஞ்சியத்தில் சேமித்து வைக் கப்பட்டிருந்த எரிபொருள் மாதிரிகள் மற்றும் கப்பல் தரவு பதிவுகளின் நகல்களைப் பெறுமாறும் நீதிவான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.
முன்னதாக, எரிபொருள் கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்தியபோது இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பில் அறிக்கையைத் தயாரிக் குமாறும், சுற்றுச்சூழலின் திறனைப் பரிசோதிக்குமா றும் சட்டமா அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்த எரிபொருள் கப்பல் குவைத்தில் உள்ள மினா அல் அஹ்மதி துறைமுகத்திலிருந்து 270,000 மெற் றின் தொன் மசகு எண்ணெய்யுடன் இந்திய துறை முகமான பாரதீப்புக்கு சென்று கொண்டிருந்தபோதே இலங்கையின் கிழக்கு சங்கமன்கண்டியில் இருந்து 30 கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள கடலில் தீப்பற்றிக்கொண்டது. (ந-இ)



## புதிய கட்டளைத் தளபதி – நல்லை ஆதீன முதல்வர் சந்திப்பு

யாழ் மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் செனரத் பண்டார நேற்று நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து கலந்துரையாடியதுடன் ஆசீர்வாதமும் பெற் றுக்கொண்டார்.
யாழ்ப்பாணத்திற்கு புதிதாக பதவியேற்றுள்ள கட்ட ளைத்தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார பல தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடி வருகின்ற நிலையில் இன்று காலை நல்லூர் வீதியில் உள்ள நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்து ஆசி பெற் றார்.
இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தின் நிலை மைகள் தொடர்பில் கலந்துரையாடினார். நல்லை ஆதீன குருமுதல்வரை சந்தித்த யாழ் மாவட்ட கட்ட ளைத் தளபதி, நல்லூர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (ந-20)





பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. சுவாமி ரதத்தில் திருவடிநிலைக்கு எழுந்தருளி தீர்த்தமாடினார். (ந)

# இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்த ஆண்டாக 2019 ஆம் ஆண்டு பதிவு

கொழும்பு, செப்.13

இலங்கையில் இறப்பர் உற்பத்தி மிகவும் குறைவடைந்த ஆண்டாக 2019 ஆம் ஆண்டு பதிவாகியுள் ளது. மத்திய வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக் கையிலேயே, இந்த விடயம் குறிப் பிடப்பட் டுள்ளது.
இதன்பிரகாரம், 2019 ஆம் ஆண்டு, 74.8 மில்லியன் கிலோ கிராம் இறப்பர் உற்பத்தி செய்யப் பட்டிருந்தாலும், இந்த உற்பத்தித் தொகை, 9.5 சதவீதத்தால் குறை வடைந்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
கடந்த ஆண்டின் இறுதியில் ஏற் பட்ட கடுமையான மழை, இறப்பர் பாலெடுக்கும் செயற்பாடுகளில் ஏற்பட்ட தடை, குறைந்த ஊதியம், சில இறப்பர் தொழிலாளர்கள் இறப்பர் பாலெடுக்கும் தொழி லைக் கைவிட்டமை போன்ற வையே இறப்பர் உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந் தன.
இந்த வீழ்ச்சி காரணமாக, சிறு தோட்ட உரிமையாளர்கள், தோட் டத் தொழில் துறைகள் பாதிக்கப் பட்டன.
இந்த உற்பத்திக் குறைவு காரண மாக, கடந்த ஆண்டில் இறப்பரின் ஏற்றுமதி அளவு குறைவடைந்தி ருந்தது. இதன்பிரகாரம், இறப்ப ரின் ஏற்றுமதி 2018 ஆம் ஆண் டுடன் ஒப்பிடும் போது, 2019 ஆம் ஆண்டு 7.0 சதவீதத்தால் குறை வடைந்துள்ளது. (ற-இ)

## ஹெரோய்னுடன் யாழில் பெண் கைது

யாழ்ப்பாணம், செப்.12

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்தி ருந்த பெண்ணொருவர் இளவாலை பொலிஸா ரால் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட் டுள்ளார்.
இளவாலை சுழிபுரம் மேற்கு பகுதியில் வீடு ஒன்றில் போதைப்பொருள் இருப்பதாக இள வாலை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, இளவாலை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போது மேற்படி வீட்டில் இருந்து ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் 36 வயது பெண்ணொருவர் கைதுசெய்யப்பட் டுள்ளார். இந்தப் பெண்ணிடம் இருந்து 2 கிராம் 10 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-20,26)


# நாட்டில் பிளாஸ்ரிக், பொலித்தீனுக்குத் தடை!

### மாற்றீடுகளை அறிமுகப்படுத்திய பின்பு நடைமுறை



**கொழும்பு, செப்.13**
**இலங்கையில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீனை எதிர்காலத்தில் தடை செய்யநடவடிக்கை எடுக்கப்பட உள்ளதது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

பொலித்தீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களை நேற்றுச் சந்தித்து இது தொடர்பில், கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீனுக்கான மாற்றீடுகளை அறிமுகப்படுத்தியதன் பின்னர், தடை அமுல்படுத்தப்படும். சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்பை கவனத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (ற-இ)



## மீண்டும் சிறையாகிறது போகம்பறை

19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர்களால் நிர்மாணிக்கப்பட்ட போகம்பறை சிறைச்சாலையை மீண்டும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். சிறைகளில் ஏற்பட்டுள்ள இட நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் ஒரு கட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.
சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் போகம்பறை சிறைச்சாலையை நூதனசாலையாகவும், கலாசாரப் பூங்காவாகவும் மாற்றுவதற்கு முன்னைய அரசாங்கம் முடிவெடுத்திருந்தது. இதனையடுத்து போகம்பறையில் இருந்த கைதிகள் பல்லேகெல்லையில் அமைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.
எனினும் சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனியவின் தகவல்படி தற்போது சிறைச்சாலைகளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையிலேயே போகம்பறையை மீண்டும் சிறைச்சாலையாக இயங்க வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். (வ-இ)

## நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம்

கொழும்பு, செப்.13
இலங்கை நாடாளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளது என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அடைமழை காரணமாக தியவன்னா ஓயாவின் நீர் மட்டம் அதிகரித்து வருவதாலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
தொடர்ந்தும் அடைமழை பெய்யுமிடத்து ஏற்படும் பேரிடரைத் தடுப்பதற்காக படையினர் தயார் நிலையில் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-இ)

## மைத்திரி, ரணில் தப்பவே முடியாது

### ராஜித எச்சரிக்கை



கொழும்பு, செப்.13
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பொறுப்பிலிருந்து தப்பவே முடியாது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு, ராஜிதவிடம் நேற்றுமுன்தினம் மீண்டும் மூன்றரை மணிநேர விசாரணை நடத்தியது. இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தத் தாக்குதல்கள் குறித்த முன் அறிவிப்புகள் கிடைத்திருப்பதை என்னால்உறுதிசெய்ய முடியும். அதே போல் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தப் பொறுப்பிலிருந்து நழுவிச் செல்லமுடியாது என அவர் இதன் போது தெரிவித்தார். (வ-இ)

## மஹர சிறைச்சாலைக்குள் கைபேசிகளுடன் பொதி மீட்பு

கொழும்பு, செப்.13
மஹர சிறைச்சாலைக்குள் நான்கு கைத்தொலைபேசிகள் மற்றும் ஒரு சிறிய பொதி புகையிலை என்பவை மீட்கப்பட்டுள்ளன.
வெளியில் இருந்து சிறைச்சாலையின் சுவர்களுக்கு மேலாக சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட இந்தப் பொருள்கள் அடங்கிய பொதி சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ந-இ)

## துப்பாக்கிகளுடன் மூவர் கைது

கொழும்பு, செப்.13
மீட்டியாகொட பகுதியில் இரட்டை குழல்12 ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் தெல்வத்த பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. இதே வேளை இரட்டை குழல்12 ரக துப்பாக்கி மற்றும் வாள் ஒன்றுடன் பூகொட பகுதியில் பொலிஸ் விசேட அதிரடி படையினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அத்துடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் மட்டக்களப்பு பகுதியில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ந-இ)

## விமான நிலையங்கள் மூடப்படவில்லை பயணிகள் எண்ணிக்கையே கட்டுப்பாட்டில்!

### அமைச்சர் டீ.வி.சானக்க விளக்கம்

கொழும்பு, செப்.13
நாட்டிலுள்ள விமான நிலையங்கள் மூடப்படவில்லை. விமானங்கள், பயணிகளின் எண்ணிக்கையே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் டீ.வி.சானக்க தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,
நாட்டில் விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்று ஒரு கருத்து உள்ளது. எனினும், நாங்கள் விமான நிலையங்களை மூடவில்லை. அவை எப்போதும் திறந்திருக்கும். ஆனால், விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையையே நாம் கட்டுப்படுத்தியுள்ளோம். விமானநிலையங்களில் அனைத்து வசதிகளும் தயாராக உள்ளன. சுகாதார அமைச்சகம்மற்றும்கொரோனா தடுப்பு குழுவின் பரிந்துரைகளின் பேரில் விமானங்கள் மற்றும் பயணிகளின் எண்ணிக்கையை நாங்கள் தீர்மானிக்கமுடியும்என அவர்மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## ரஷ்ய பல்கலைகள் நீக்கத்தால் உதவிகளில் பாதிப்பு ஏற்படாது

### ரஷ்ய தூதரகம் நம்பிக்கை

கொழும்பு, செப்.13
இலங்கை மக்களுக்கு ரஷ்ய அரசாங்கம் வழங்கும் உதவிகளில் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்று ரஷ்ய தூதரகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.
தமது நாட்டின் மூன்று முக்கிய அரச பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச பல்கலைக் கழகப் பட்டியலில் இருந்து இலங்கை மருத்துவ சபை அண்மையில் முன்னறிவித்தல் இன்றி நீக்கியமை தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள இலங்கை ரஸ்ய தூதரகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.
மேலும், இலங்கை மருத்துவ சபையின் இந்த முடிவு, எதிர்காலத்தில் இலங்கை மக்களுக்கு ரஷ்ய அரசாங்கம் வழங்கும் உதவிகளில் பாதிப்பை ஏற்படுத்தாது. 1960ம் ஆண்டு முதல் இலங்கை மாணவர்களுக்கு இந்த மூன்று மருத்துவ பல்கலைக்கழகங்களும் புலமைப்பரிசில்களை வழங்கிவந்தன. இதன் விளைவாக இலங்கையின் மருத்துவத் துறையில் குறிப்பிடத்தக்க தொழில் வல்லுநர்கள் உருவாகியுள்ளனர்.
இலங்கையால் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட, ரஷ்யாவின் மக்கள் நட்பு பல்கலைக்கழகம், பைரோகோவ் ரஷ்ய தேசிய ஆராய்ச்சி மருத்துவ பல்கலைக் கழகம் மற்றும் ட்வெர் அரச மருத்துவக் கல்லூரி ஆகியன கடந்த பல ஆண்டுகளாக இலங்கையின் மருத்துவசபை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை தொடர்ச்சியாக நடத்திவந்தன. இதேவேளை வழக்கமான கொடுப்பனவுகளையும் செய்து வந்தன. எனினும் முன்னறிவித்தல் இன்றி இவை நீக்கப்பட்டுள்ளன என்று ரஷ்ய தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-இ)

# கட்சியை பாதாளத்துக்குள் தள்ளிய எம்.ஏ.சுமந்திரன் நீக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா காரணங்களை முன்வைத்து கடிதம்



நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு முதன்மையான காரணம் எம்.ஏ.சுமந்திரன் என்று குறிப்பிட்டு, அவரைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தி, ஒழுக்காற்று நடவடிக்கைக் குழுவின் தலைவரும், மூத்த துணைத் தலைவருமான சீ.வி.கே.சிவஞானத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், ஜனாதிபதி சட்டதரணியும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவருமான கே.வி. தவராசா கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை முழுமையாக வருமாறு:

நான் தமிழ் அரசுக் கட்சியில் இணைந்து செயற்படுகின்றமை தமிழ் தேசியத்தின் மீது கொண்ட பற்றினால் மட்டுமே. கடந்த பத்து ஆண்டுகளாக கட்சியில் பல பதவிகள் எனக்கு வழங்கப்பட்டன. எந்தப் பதவிக்காகவுமோ, கொழும்பு மாவட்டத்தில்; போட்டியிட வேண்டுமென்றோ அல்லது தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமென்றோ இன்றுவரை கட்சித் தலைமைத்துவத்திடம் எந்த வேண்டுகோள்களையும் முன்வைக்கவில்லை. இனியும் முன்வைக்கப் போகின்றவனும் அல்லன். கட்சித் தலைமையின் வேண்டுகோளுக்கும், அறிவுறுத்தலுக்கும் அமைவாக கொழும்புக் கிளையை சொந்த நிதியிலேயே நடத்தி வருகின்றேன். கட்சியிலிருந்து எந்தச் சூழ்நிலையிலும் ஒரு சதமேனும் நிதி உதவி பெற்றவனல்லன். ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இருப்பைப் பாதிக்கும் செயற்பாடுகளை கூறவேண்டிய தார்மீக கடமையும் கடப்பாடும் எனக்குண்டு.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கட்சி மிகப் பெரிய பின்னடைவை சந்தித்தமைக்கு முக்கிய காரணகர்த்தாவாக செயற்பட்டவர் எம்.ஏ.சுமந்திரன். கட்சியின் கட்டுக்கோப்பையும் மீறி பொறுப்பற்ற முறையில் தான் தோன்றித்தனமாக தன்னிச்சையாக எடுத்த முடிவுகளாலும் செயற்பாடுகளாலும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் மனதைப் புண்படுத்தி பல்லாயிரக்கணக்கான வாக்குகளை தமிழ் அரசுக் கட்சி இழந்தமைக்கு சுமந்திரன் முக்கிய காரணகர்த்தா.

அவர் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படவேண்டும். கட்சியிலிருந்து நீக்கப்படாவிடின் ஏழு தசாப்தங்களுக்கு மேலாக நிலைநிறுத்தப்பட்ட தமிழரின் உரிமைகளுக்கான அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் அர்த்தமிழந்து போவதோடு தாயகத் தேசிய கொள்கைகளும் தமிழ் அரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பெறுமதியிழந்து அழிந்தே போகும் நிலை நிச்சயம் உருவாகும்.

### நீக்கவேண்டிய காரணங்கள்

2015ஆம் ஆண்டின் நல்லாட்சியில் புதிய அரசமைப்பு விவகாரம், தமிழ்த் தேசிய கொள்கை நீக்கல் அரசியல், ஆயுதப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் கருத்துக்கள், தமிழ் ஊடகங்கள் மீது அவதூறான கருத்துக்கள், தமிழினப் படுகொலை விவகாரத்தில் சர்வதேச விசாரணை முடிந்து விட்டது எனத் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றமை, ஜெனிவா விவகாரங்களைக் கையாண்ட முறை, தேசிய அரசியலுக்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமை தமிழ்த் தேசிய அரசியலுக்கு வழங்காமை (கடும் அரச ஆதரவு), அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்.

இந்த விடயங்களில் சுமந்திரனின் செயற்பாட்டை விவரமாக இங்கே குறிப்பிடுவதை கட்சியின் எதிர்கால நலன் காரணமாகத் தவிர்த்துள்ளேன். இந்த 8 விடயங்கள் உட்பட கீழே விவரமாகக் கூறப்பட்டுள்ள 12 விடயங்களுமாக, சாட்சியங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளின்றி தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை கட்சியிலிருந்து நீக்கலாம்.

### வேட்பாளர்கள் தெரிவு

(அ) வேட்பாளர் தெரிவில் நியமனக் குழு உறுப்பினர் என்ற வகையில் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி, மகளிர் அணிக்கு முன்னுரிமை வழங்கி வேட்பாளர்களைத் தெரிவு செய்யம்படி வேண்டுகோளை முன்வைத்தபோதிலும் அவற்றைப் புறந்தள்ளி கட்சி நலனைப் பாராது தனது தெரிவாக விலாசமற்ற தமிழ் மக்களுக்கு யாரென்றே தெரியாத கட்சியின் உறுப்பினரல்லாத புது முகங்களான அம்பிகா சற்குணநாதன், நளினி ரட்ணராஜா ஆகியோரை சுமந்திரன் தெரிவு செய்தார். இவர்கள் இருவரது தெரிவிலும் யாப்பு விதிகளுக்கு மாறாக தன்னலம் கருதி கூடுதல் அக்கறை செலுத்தினார். நளினி ரட்ணராஜாவை, சுமந்திரன் வேட்பாளராகத் தெரிவு செய்வதற்கு எடுத்த கடும் முயற்சி கட்சியின் மற்றைய வேட்பாளர்களினதும் அங்கத்தவர்களினதும் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது. அம்பிகா சற்குணநாதன், வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டு வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டங்கள் மற்றும் தேர்தல் பரப்புரைகளும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்ய திகதி குறிப்பிடப்பட்ட நாளில் தேர்தலில் போட்டியிடாமல் பின்வாங்கிய அவரை, சுமந்திரன் இறுதி நாளன்று தேசிய பட்டியலில் உள்வாங்கினார்.

(ஆ) மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பொதுத்தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்த மனித உரிமைச் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான மங்களேஸ்வரி சங்கர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடுவது தொடர்பில், கருத்துகள் நியமனக் குழுவில் முன்வைக்கப்பட்டபொழுது இந்த விண்ணப்பதாரி சகல தகுதிகளையும் கொண்டவர் என்பதோடு வாக்காளர்களால் அங்கீகரிக்கப்பட்டு வெற்றி பெறக்கூடிய வேட்பாளராகையால் அவருக்கு நியமனம் வழங்கும்படி நான் நியமனக் குழுக்கூட்டத்தில் தெரிவித்த போதிலும். சுமந்திரன் நியமனம் வழங்கக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்தார். கட்சி நலன் பாராமல் தனது தனிப்பட்ட காரணங்களுக்காக சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கருக்கு போட்டியிட அனுமதி வழங்கப்படுவது சுமந்திரனின் தலையீட்டினால் நிராகரிக்கப்பட்டது. மங்களேஸ்வரி சங்கருக்கு வாய்ப்பு அளித்திருந்தால் ஒரு பெண் பிரதிநிதித்துவம்; கிடைத்திருக்கும் என்பதுடன் மட்டக்களப்பிலிருந்து மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள்.

(இ) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் மங்களேஸ்வரி சங்கரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட பின்னர் மங்களேஸ்வரி சங்கர்; தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் போட்டியிட்டு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். தனக்கு நெருக்கமானவர் என்பதற்காக எந்தப் பொதுமகனும் அறியாத தெரியாத நளினி ரட்ணராஜாவுக்கு நியமனம் வழங்குவதற்காக மக்கள் அபிமானம் பெற்ற மங்களேஸ்வரி சங்கரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. இச்செயல்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கணிசமான வாக்குச் சரிவை ஏற்படுத்தியதோடு ஒரு பிரதிநிதித்து வத்தையும் இழக்கச் செய்தது.

### (2) ஊடகப் பேச்சாளர் பதவி துஷ்பிரயோகம்; தமிழ்த் தேசியக் கொள்கையை கொச்சைப்படுத்தியமை

(அ) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பதவி என்பது பொறுப்புள்ள ஒரு பதவி நிலையாகும். அப்பொறுப்பைச் சுமந்துள்ள சுமந்திரன் மிகவும் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டிய நிலையில் இருந்து விலகி சுயநலம் கருதி தன்னிச்சையாக செயற்பட்ட பல சந்தர்ப்பங்கள் பொதுத்தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் நிகழ்ந்துள் ளன.


### தேசியக் கொடியும் தேசிய கீதமும்

(ஆ) தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் தானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் மட்டுமே ஏற்றுக்கொள்கின்றனர் என நேர்காணலில் கூறியமை கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களை வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளமையையும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும். இந்தச் செயற்பாடு தமிழ் மக்களின் விருப்பத்துக்கு, எதிர்பார்ப்புகளுக்கு நேர்மாறாக சுமந்திரன் செயற்படுகின்றார் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

(மிகுதி நாளை)



# நீரின்றி அமையாது உலகு



ராம்குமார் கார்த்திகா

**“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும் வான்இன்று அமையாது ஒழுக்கு”**

நீர் இல்லாமல் மனித இனத்தால் வாழ முடியாது. அந்த நீரோ மழை இல்லாமல் கிடைக்காது.
நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் குறள் இது. தண்ணீர் “திரவத் தங்கம்” என்று அழைக்கப்படுகிறது. தண்ணீர் இல்லாமல் எமது வாழ்க்கையை கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. உலகத்தில் நீரில் 3 வீதமான நீரே நல்ல தண்ணீர். இதை மட்டுமே நாம் குடிக்கவும், பயன்படுத்தவும் முடியும். இதிலும் 2 சதவீத தண்ணீர் பனிக்கட்டியாக உள்ளது. வெறும் 1 வீத தண்ணீர் மட்டுமே பூமி முழுவதும் நாம் வாழும் பகுதியில் கிடைக்கிறது . மழை பெய்வதன் மூலம் மட்டுமே நாம் அதிகளவு நல்ல தண்ணீரைப் பெறுகிறோம்.

நீர் கடலிலிருந்து கதிரவனின் வெப்பத்தால் நீராவியாகி மேலெழுந்து சென்று வளிமண்டலம் கடந்து மேகமாக மாறுகின்றது. சின்னச் சின்னத் துகள்களாக பிரிந்து கிடக்கும் மேகங்களை காற்று உந்துவதனால் திரள் கார் முகில் மேகங்கள் உருவாகின்றன. மேகங்களிலிருந்து துளிகளாக, சிதறும் நீர்த்துளிகளாக மாறுகின்றது. நீர்த் துளிகள் எப்பொழுது மேகத்தில் அதிகரித்து அதன் உச்சநிலையைத் தொடுகின்றதோ அப்போது காற்றின் மின்னோட்டத்தின் உதவியினால் மழையாகப் பொழியத் தொடங்குகின்றது. மழை நீராகப் பூமியை வந்து சேரும் நீர் பல்வேறு பெயர்களால் சூட்டப்படுகிறது.

காடு அதிகம் இருக்கும் மலை உச்சியில் விழும் மழை நீர் சொட்டுச் சொட்டாக இணைந்து சிறிய “நீரூற்றாக” மாறுகின்றது. சிறிய நீரூற்றுகள் இணைந்து “அருவியாக” மாறுகின்றன. மலை உச்சியில் இருந்து விழும் போது “நீர்வீழ்ச்சியாக” மாறுகின்றது. வளைந்து ஓடும் போது அது “நதியாக” மாறுகின்றது. நீர் உங்களுக்கு எப்படி பயன் அளிக்கிறது தெரியுமா?

நீரின் பயன்கள்:

நீர் மக்களின் வயிற்றுப் பசியைத் தீர்க்கும் விவசாயத் துறைக்கு மழையாக பெரும் சேவை செய்கிறது. ஒரு நாட்டின் விவசாய உற்பத்தியை நிர்ணயிப்பதில் நான் மழையாகப் பெரும் பங்களிப்புச் செய்கின்றேன். விவசாயத் துறையின் வளர்ச்சி ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி புரிகிறது. மழைநீரின் துணையுடன் செழிக்கும் பயிர்கள் மக்களுக்கு உணவாகிட உதவுகிறேன். இந்தப் பயிர்கள் விவசாயிகளுக்கு வருமானத்தை ஈட்டித் தந்து மக்களின் வயிற்றுப்பசியைப் போக்குகின்றன. உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் நாட்டுக்குக் கணிசமான வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கின்றது. பல இடங்களில் அந்த வகையில் பெய்யாததால் அங்குள்ள மக்கள் பசிக் கொடுமையில் இறக்கின்றனர். அந்தவகையில் ஒரு நாட்டின் வளத்தை மழைவீழ்ச்சியே நிர்ணயிக்கின்றது.

மழை மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் பிராணிகள், தாவரங்கள் உயிர் வாழவும் அடிப்படைக் காரணியாக அமைகின்றது. மனிதனின் அடிப்படை தேவைகளில் ஒன்று. மின்சார உற்பத்திக்கும், இன்னும் பல பொருள்கள் தயார் செய்யும் தொழற்சாலைகள். மற்றும் உலகில் அனைத்து இடங்களிலும் நீர் தேவைப்படுகின்றது. இது மட்டுமல்லாமல் உலகத்தில் இருக்கும் அனைத்து வளங்களும் நீர் என்ற முக்கிய அம்சத்தாலேயே முடிவு செய்யப்படுகின்றது. நீர் இல்லாமல் எந்தவொரு உயிரினமும் இந்தப் பூமியில் வாழ இயலாது.

நீர் வளத்திற்கு மரங்களே முக்கிய காரணம். ஓங்கி வளர்ந்த மரங்கள் நிறைந்த காடுகளே நீரின் பிறப்பிடம். அங்கு இருந்துதான் நீர் உங்களுக்கு அருவியாக ,நதியாக கிடைக்கின்றது. மரங்கள் நீரின் வளத்திற்கு மட்டுமல்லாது மக்களுக்கும் உதவுகின்றன. நாம் சுவாசிக்கத் தேவைப்படும் ஒட்சிசன் வாயு மரங்களில் இருந்தே கிடைக்கின்றது. நீரின் வளத்தைப் பெருக்கவும். மக்களின் வாழ்க்கையை நலமாக அமைக்கவும் மரங்கள் வளர்க்க வேண்டும். ஆனால் தற்போது மரங்களை வளர்ப்பதற்குப் பதிலாக மரங்களைத் தறிப்பதிலேயே மனிதர்கள் ஆர்வம் காட்டுகின்றமை கவலைக்குரியதொன்று.

தொழிற்சாலைக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள். பிளாஸ்டிக் கழிவுகள் , மனிதர்கள் பயன்படுத்தும் நச்சுப்பொருள்கள் என இவை அனைத்தினாலும் நீரின் தூய்மை கெடுக்கப்பட்டு நீரின் தரம் குறைகின்றது.

இது போன்ற கழிவுகளால் நீர் ஆதாரங்களான ஆறுகள் மற்றும் கடல்களின் தூய்மை மாசடைகிறது.

மாசுபட்ட குடிநீரால் டைபாய்டு காய்ச்சல், அமீபியாசிஸ் (மனிதர்களின் இரப்பைக் குடல் வழியில் ஏற்படும் நோய்த்தொற்று), ஜியார்டியாசிஸ் (சிறுகுடலில் ஜியார்டியா லேம்பிலா எனப்படும் ஒட்டுண்ணியால் ஏற்படும் குடல் தொற்றுநோய்), அஸ்காரியாசிஸ் (குடல் புழுக்களை ஏற்படுத்தும் ஒட்டுண்ணி நோய்), கொக்கி புழுக்கள் ஆகிய நோய்த் தாக்கங்கள் ஏற்படுகின்றன. மாசுபட்ட கடல் நீரால் தோல் நோய்கள், காதுவலி, கண்கள் சிவத்தல், மூச்சு திணறல் நோய்கள், மூளைக் காய்ச்சல், வாந்திபேதி, வாந்தி மற்றும் வயிற்றுவலி போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

மாசுபட்ட நீரில் வளரும் மீன்களை உணவில் சேர்த்துக் கொண்டால், உடலுக்குப் பாதிப்பு ஏற்படும். மாசுபட்ட நீரில் வளர்ந்த காய்கறிகளை உட்கொண்டாலோ, கைகளை அலம்பினாலோ பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாது.

உரம் நீர் மாசுபாட்டினால் மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்கினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. மாசுபாடு (நைட்ரஜன், பொஸ்பரஸ் போன்றவை) அதிக உரங்களினால் பாசிகள் தேவைக்கதிகமாக வளருதல். இதனை உயிரினங்கள் உண்ணும்பொழுது இறக்க நேரிடும்.

மழையாக நீர் மண்ணில் விழும் போது மிகவும் தூய்மையாக இருக்கின்றது. மனிதர்கள் சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதனால் நீரும் மாசடைகின்றது.

சனத்தொகை பெருக்கத்தினால் நீரின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. நிலத்தடி நீரை மனிதர்கள் பெருமளவில் பயன்படுத்தி வருவதால் கடல்நீர் உட்புகுந்து நல்ல நீரை உபயோகிக்க இயலாதவண்ணம் செய்யும் அபாயம் தொடர்கின்றது .. எனவே எதிர்காலத்தில் குடிக்க நீரின்றி மக்கள் தவித்து வாழும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு.

இவைகள் எல்லாம் நடக்காமல் தடுக்கும் பொறுப்பு மனிதர்களாகிய எமது கைகளில் தான் தங்கி இருக்கின்றது. எனவே நீரை மாசுபடுத்தாமல் பயன்படுத்துங்கள். மாசற்ற நீரைப் பெறுவதற்கு வீட்டுக்கு ஒரு மரம் கண்டிப்பாக வளர்க்க வேண்டும். எனவே மண்ணை வளப்படுத்த நீங்கள் முடிந்த அளவுக்கு மரங்களை நடுங்கள்.

**“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.”**

என்னும் வள்ளுவரின் வாக்கினை நினைவிற் கொண்டு நாம் இனிவரும் காலத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் முயற்சியில் இறங்காவிடில் எங்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாய் மாறும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. தற்போது அரசாங்கமும் தண்ணீர்ப் பஞ்சத்தை போக்கும் திட்டத்துடன் மழை நீர் சேமிப்பு வழிமுறைகளை அறிவித்துள்ளது.. இதுவரை பெய்த மழைநீரை சரியாக சேமிக்காமல் கடலில் கலந்திடச் செய்து வீணாக்கிய காரணத்தினால் ஏற்பட்ட இந்த அவல நிலையைக் கருத்தில் கொண்டு இனிமேல் மழைநீர் சேமிப்பு முறைகளைப் பின்பற்றி நிலத்தடி நீரின் வளத்தினை அதிகரிப்பதன் மூலம் நாம் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும். “வான் நோக்கி வாழும் உலகு” என்றானே வள்ளுவன் அதன் உண்மை நிலை உணர்ந்து வான் தரும் கொடையாம் மழையை பயனுள்ள வகையில் ஆக்கி, மழைநீரைச் சேமித்து , பாதுகாத்து வாழ்வோமேயானால் நீரின்றி சிரமத்தோடு வாழும் நிலை மாறிவிடும் என்பது நிச்சயம்.

**“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.”**

என்றார் வள்ளுவர் இருபுனல் எனும் வாக்கில் மேல்நீர் எனப்படும் மழையும் கீழ்நீர் எனப்படும் நிலத்தடி நீரையும் குறித்துள்ளமை நோக்கி நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கி மழைநீர் சேமிப்பு முறைகளைக் கடைப்பிடித்து செயலாற்றி நாட்டில் உயர்வோம். நலமான, வளமான எதிர்காலம் காண்போம்.

# நீத்தார் நயப்புரை




தென்மராட்ச்சி , நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளர் பொன். இராசநாயகம் ( வயது 72 ) கடந்த வியாழக்கிழமை ( 03-09-2020 ) காலமானார். இலங்கை பொலிஸ் மற்றும் மக்கள் வங்கி போன்றவற்றில் கடமையாற்றியுள்ள இவர், தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார் பிரதேசத்தின் கூட்டுறவுச் சங்கம், முன்பள்ளி, சனசமூக நிலையம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட பல்வேறு சமூக அமைப்புகளில் தலைவர் உட்பட முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

இவர் 1981 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்ற காந்தி பாலர் பாடசாலையின் ஸ்தாபகரும் ஆவார்.

# மகிழ்ச்சியின் திறவுகோல்

# பொறுமை



■ சு. சுப்பிரமணியன்


புத்தகங்கள் அறிவின் திறவுகோல் ஆகும். இந்தத் திறவுகோல் அறிவை மட்டும் திறக்கின்றதா? அல்லது பிற உணர்வுகளைத் திறக்கின்றதா?. ஆயிரம் பக்கங்களைக் கொண்ட புத்தகத்தை ஒரு அறிவாளி பொறுமையுடன் படித்து மேலும் பேரறிஞன் ஆகின்றான். ஆனால் அந்த பேரறிஞன் வாழ்க்கையில் சாதிக்கின்றானா? இல்லையா? என்பதை அவனது வாழ்க்கை நெறிமுறையில் காண முடியும். ஒரு புத்தகத்தை வாசிப்பதில் பொறுமையைக் கடைப்பிடிக்கின்றவன், தனது வாழ்க்கையில் நடக்கும் பல சம்பவங்களுக்கும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான்வாழ்க்கைஅவனுக்குசாதனைப் புத்தகமாக விளங்கும். அல்லது அவனால் வாழ்க்கையில் சாதனை படைக்க முடியும்.



பல புத்தகங்களைக் கற்று உணர்ந்த பேரறிஞனுக்குப் பொறுமையைக் கடைப்பிடிக்காத வாழ்க்கைத் துணை அமைகிறது என வைத்துக்கொள்வோம். அப்போது அவன் வாழ்க்கையில் சாதிக்க வேண்டியவைகள் ஏராளமாக இருக்கும். அத்தனைக்கும் பொறுமை ஒன்றே மூல காரணமாக அமையும்.

ஓரளவிற்குப் படித்த ஒருவனுக்கு, பொறுமையின் சிகரமாய் வாழ்க்கைத் துணை அமைகிறது என்பதை வைத்துக் கொள்வோம். அவனுக்கு வாழ்கை ஒரு சாதனைப் புத்தகமாக திகழும். ஏனெனில் பொறுமை உள்ள இடத்தில் பூகம்பம் வெடிப்பதில்லை. இருவருமே பொறுமை உள்ளவர்களாக இருக்கின்றார்கள் என வைத்துக் கொள்வோம். அவர்கள் இருவரும் எந்த ஒரு செயலையும் பொறுமையுடன் செய்து வாழ்க்கையில் சந்தோஷத்தைப் பங்கிட்டுக் கொள்வார்கள். இவர்களின் மத்தியில் மகிழ்ச்சி தங்குவதற்குக் காரணம் அவர்களது பொறுமை.

பல புத்தகங்களைக் கற்றறிந்த பேரறிஞன் பொறுமையுடன் வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளை அனுபவ ரீதியாக படித்தும், செயற்படுத்தியும் வர வேண்டும். பொறுமை இல்லாத ஒரு நபரிடம் ஆணவம் தாண்டவமாடும். அந்த ஆணவச் செருக்கால் ஒருவனுடைய வாழ்க்கைக்கு தேவை இல்லாத பக்கங்களைக் கிழித்து எறிவதைப் போல் ஆகிவிடும். பொறுமை துணிவைத் தருகிறதா? அல்லது சோம்பலைத் தருகிறதா? ஒரு மனிதன் பொறுமையைத் தனது அனைத்து செயற்பாட்டிக்கும் பயன்படுத்தினால், அது சோம்பேறித்தனமாகும். எந்தச் செயலுக்கும் பொறுமையைக் கடைப்பிடித்தால் அது துணிவைத் தரும். துணிவு என்பது வேறு. சோம்பல் என்பது வேறு. சோம்பலையும் பொறுமைதான் விதைக்கிறது.



துணிவையும் பொறுமைதான் விதைக்கிறது. பொறுமையின் சிறப்புக்குப் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

ஒரு சிற்பி ஒரு சிலையை செதுக்க வேண்டும் என்றால் அவனிடம் பொறுமை இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த சிற்பியால் சிலையைச் செதுக்க முடியும். அந்த சிற்பியின் கைகள் உளியுடனும், சிந்தனையுடனும் செயற்படும் போதுதான் சிலை உருவாகின்றது. பொறுமைக்கு மற்றொரு பெயர் தான் சிந்தனை. சாதிக்க நினைக்கின்றவர்களிடம் பொறுமை அதிக அளவில் நிறைந்திருக்கும். சாதிப்பதற்கு அறிவுடன் பொறுமையும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.


அறிவு என்பது நன்மை தீமைகளைப் பிரித்துப் பார்ப்பதற்குத் எண்ணுகின்ற மன உணர்வின் திறவுகோல். பொறுமை என்பது அந்த உணர்வின் திறவுகோலால் பல செயல்களை வாழ்க்கையில் செய்து காட்டக் கூடியதாகும். காற்று பலமாக வீசினால் கடல் கொந்தளிக்கும். கடல் கொந்தளித்தால் "சுனாமி" தலை விரித்தாடும். "சுனாமி" தலை விரித்தாடினால், அழிவுகள்தான் தோன்றும். அதேபோல் ஒரு மனிதனிடம் ஆணவம் இருக்குமானால் "கோபம்" அவனிடம் நிறைந்திருக்கும். இதனால் இழிவு அவனுக்கு மட்டுமல்ல, அவனைச் சார்ந்த சமுதாயத்திற்கும் தான். சிந்திக்கத் தெரிந்தவன்தான் சாதனைச் சிகரத்தை எட்டத் தெரிந்தவன். ஒரு மனிதனிடம் பல உணர்வுகள் புதைந்திருக்கும் இரக்கம் காட்டுதல், பிறருக்கு உதவி செய்தல், ஆவேசம் கொள்ளுதல், அடங்கிப் போகுதல், அடக்கி ஆளுதல் ,பழி தீர்த்தல், பொறாமை கொள்ளுதல், கடமை தவறுதல், கண்ணியம் காத்தல், கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல். இவை யாவும் பல்வேறு உணர்வுகளின் வெளிப்பாடாகும். இந்திய நாட்டின் சுதந்திரத்தைப் பெற மகாத்மாகாந்தி வெள்ளையனின் ஆணவச் செருக்கை தமது பொறுமையால் அடக்கினார். அந்த ஆணவச்செருக்கை சிந்தனையுடனும், பொறுமையுடனும் கையாண்டு சாதித்ததால்தான் என்றைக்கும் அவர் இந்தியாவின் தந்தையாகவே திகழ்கின்றார். இவருக்கு முன் சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையில் கண்டதை தமது செயற்பாடுகளில் செய்து காட்டினர். அதுதான் அவர்களது பெறுமதிமிக்க போதனைகள்.

போதனைகள் என்பது மற்றொரு அறிவின் திறவுகோல். தத்துவத்தின் திறந்த வாசல். தத்துவங்கள் வாழ்க்கையின் மகத்துவங்கள். இவற்றை எல்லாம் எவனொருவன் வாழ்க்கையில் கடைப் பிடிக்கின்றானோ, அவன் சாதிக்கப் பிறந்தவன். இந்தப் பொறுமைக்கு மறு பெயர்தான் சகிப்புத் தன்மை.

சகித்துக் கொள்ளத் தெரியாதவன் சாதிக்கத் தெரியாதவன். வாழ்க்கையில் சாதிப்பதற்கு அறிவும், அறிவுடன் பொறுமையும் மிக அவசியமாகும். ஒரு கட்டிடம் உருவாக வேண்டும் என்றால் அதற்குக் கட்டடப் பொறியியலாளரின் கட்டட வரைபடம் மிக அவசியம். அந்தக் கட்டிடப் பொறியியலாளருக்குத் தேவை பொறுமை. பொறுமையுடன் கட்டிடப் பொறியியலாளர் வரைகின்ற வரைபடத்திற்கு ஏற்றவாறு கட்டிடம் உருவாக வேண்டும் என்றால் பொறுமையுடன் செயற்படுத்தக் கூடிய மனிதர்கள் வேண்டும். அந்த மனிதர்களிடம் பொறுமை இருந்தால்தான் ஒரு கட்டிடம் ஒன்றுபட்ட மனிதர்களால் உருவாக்கப்பட்டதாக விளங்கும்.

இங்கே அறிவு செறிந்த ஒரு மனிதனும், பொறுமை நிறைந்த பல மனிதர்களும் தேவைப்படுகின்றனர். அறிவும் பொறுமையும் ஒரு மனிதனுக்கு இரு கண்களைப் போன்றவை. கண்களுக்குள் வேறுபாடு இருந்தால் காட்சிகளில் மாறுபாடு தெரியும். அதனால்தான் அனைத்து ஜீவராசிகளுக்கும் கண்கள் சமமாகப் படைக்கப்பட்டுள்ளன. சமமாகப் படைக்கப்பட்டக் கண்களால் கானப்படுகிற காட்சிகள் ஒரே சம நேர் கோட்டில் செல்லுகின்ற கோள்களைப் போல் தெரிகின்றன. அதே போலதான் அறிவுக் கண் திறந்தவனும், பொறுமைக் கண் திறந்தவனும், மேற்கொள்ளும் செயல்கள்தான். வாழ்க்கையில் பல உன்னத செயல்கள் சமமாக இருக்க வழி வகுக்கும்.

பொறுமை என்பது மென்மையானது. ஆணவம் என்பது நெருப்பைப் போன்றது. மிகவும் கொடுமையானது. பொறுமை உள்ளவனிடம் உண்மை இருக்கும். ஆணவச் செருக்கு உள்ளவனிடம் பொய்மை நிறைந்து இருக்கும். ஒரு தவறை மறைக்க பல தவறுகளை செய்ய உந்த வைக்கும் ஆணவம். ஆனால் பொறுமை ஒரு தவறு செய்ததும், தன்னையே திருத்த இயலும். அல்லது அந்தத் தவறுக்காக தன்னை வருந்த வைக்கும். உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும். தப்பு செய்தவன் தண்டனைப் பெற்றே ஆகவேண்டும். அதேபோல கோபம் என்ற உப்பு ஒருவனிடம் அதிகம் இருந்தால் அவன் வாழ்க்கையில் பொறுமை என்ற தண்ணீரைத் தேடுகின்றான். எனவே வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்றால் பொறுமையைக் கண்டிப்பாக எல்லோரும் கடைப் பிடிக்க வேண்டும். பொறுமையைக் கடைப்பிடிப்பதால் சோம்பலும் விழித்துவிடும். அந்த சோம்பலையும் ஒழிக்க வேண்டும் என்றால் சிந்திக்க வேண்டும். சிந்திக்கத் (மன்னிக்கத்) தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயிலப்பா என்று ஒரு கவிஞன் பாடியுள்ளான். விளக்கு எரியும் என்றால் வெளிச்சம் வராது. அந்த விளக்கு எரிவதற்கு ஒரு தீக்குச்சியை உரச வேண்டும். அப்போதுதான் விளக்கு வெளிச்சத்தைத் தரும். அதேபோல் சாதிக்க வேண்டும் என்றால் சாதிக்க முடியாது. சாதிப்பதற்கு சிந்திக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் சாதிக்க முடியும்.




ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் உள்ளதைப்போல், பொறுமைக்கும் இரண்டுப் பக்கங்கள் உள்ளன. ஒன்று சிந்திப்பது. மற்றொன்று சாதிப்பது. கவியரசு கண்ணதாசனின் பாடல்கள் சிந்திக்க வைக்கக் கூடிய பாடல்கள். ஆடத் தெரிந்தவனுக்கும், பாடத் தெரிந்தவனுக்கும் உள்ளுக்குள் இருப்பது பொறுமையின் சிந்தனைப் பக்கமே. இயல், இசை மற்றும் நாடகம் இந்த மூன்றுக்கும் தேவை பொறுமை. பொறுமையுடன் இம்மூன்றையும் ஒருவன் கற்றுக்கொண்டால் அவன்தான் சாதிக்கத் தெரிந்தவன்.

சார்லிசாப்ளின் என்ற ஒரு மாபெரும் கலைஞனை நாம் நன்கு அறிவோம். அவனது நடையிலும், செயலிலும் சிந்திக்க வைக்கும் அம்சங்கள் இருக்கும். வாழ்க்கையில் சாதிப்பதற்குப் பொறுமை மிக அவசியம் என்பதை பல எமது முன்னோர்களின் வாழ்க்கை எமக்குக் கற்றுத் தந்துள்ளது. அவர்களைப் பின்பற்றுவோம். அவர்களைப் போல் நாமும் சாதனை படைப்போம். பெருமைமிகு பொறுமையை வாழ்க்கையில் கடைப்பிடிப்போம். வாழ்க்கையில் நடைபோடுவோம். தடைகளைத் தகர்த்தெறிவோம்.

# விம்பம்

## ஓவியக் கலைக்கோர் உயிரோட்டம்




ஒரு ஒளிப்படக் கருவி போல அத்தனை விடயங்களையும் உள்ளடக்கி ஒரு சம்பவத்தை, ஒன்றைப் பிரதிபலிப்பது என்பது எல்லோராலும் முடியாததொன்று. சிலருக்கு மட்டுமே அது கைவந்த கலையாக இருக்கும். அவ்வாறான சிலரிலும் ஒரு சிலரே மக்கள் மத்தியில் பிரபலமாகின்றனர். எக்காலத்திலும் கொண்டாடப்படும் கலைஞராகின்றனர். அந்த வகையில் ஈழத்தின் மூத்த **ஓவியர் ஆசை இராசையா** உலகறிந்த ஓவியர்.

பல ஓவியக் கண்காட்சிகளை நடத்தியும் பரீட்சார்த்தமான பல்வேறு உத்திகளைக் கையாண்டும் உலகப் புகழ்பெற்ற மாபெரும் ஓவியக்கலைஞன் அவர். அண்மையில் அவர் இறையடி சேர்ந்திருக்கின்ற நிலையில் அவரது இறுதி நூலான **விம்பம்** (முதற் பதிப்பு 2019 ஆம் ஆண்டு) அவரது புகழை, ஓவியத் திறனை இன்னும் மெருகூட்டியிருக்கிறது.

**விம்பம்** நூலானது ஆசை இராசையாவினுடைய காவிய நூலாகவும், ஓவியக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது. இதனுடைய தலைப்பும் அட்டைப் படமும் உள்ளடக்கமும் உள்ளடக்கச் சிறு தலைப்புக்களும் வித்தியாசமான புதிய பாணியில் அமைந்திருப்பது இந்நூலின் சிறப்பு. ஓர் இலக்கியம் காலத்தின் கண்ணாடி, சமூகத்தின் கருதுகோள் என்பதற்கிணங்க நூலின் அட்டைப்படம் யாழ்ப்பாண மண்ணின் மகுடமான பனை மரங்களையும் பற்றைப் புதருக்குள் விறகு எடுத்து நடக்கும் பெண்களையும் கொண்டமைவதனூடாக யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலின் சிறுபகுதியை காட்சிப்படுத்துகின்றது.

நூலின் சிறு தலைப்புக்களைப் பார்க்கும் போது இப்படியும் வாசகரைக் கவரலாம் எனும் அவரது புதிய உத்தி வியப்பை வரவழைக்கிறது.

நூல் பற்றிய அறிமுக உரைகள் **"ஊற்றுக்கண்"** எனும் தலைப்பின் கீழும் ஓவியரின் சுயசரிதைக் கட்டுரைகள் தமிழில் ஒரு மலரின் வாழ்க்கை வட்டத்தை மிக நுணுக்கமாக சுட்டிக்காட்டும் அரும்பு, நனை, முகை, மொக்குள், முகிழ், மொட்டு, போது, மலர், வீ, பொதும்பர், பொம்மல், செம்மல் எனும் சொற்கள் போன்று தனது வாழ்வின் பல்வேறு கட்டங்களையும் முகை, மொட்டு, போது, மலர் என தலைப்பிட்டு தனது அனுபவங்களைப் பகிர்ந்துள்ளமை பாராட்டிற்குரியது.

**விம்பம்** நூலில் இடம்பெற்றுள்ள ஓவியங்களை நோக்கும்போது வாழ்வின் மீது நம்பிக்கை கொண்ட முகங்களையும் இயற்கைக் காட்சிகளின் எழில் கொஞ்சும் தோற்றமும் மிகத் துல்லியமாக மனதில் பதிந்து விடுகிறது. நீர் வர்ண ஓவியமாயினும் தைல வர்ண ஓவியமாயினும் தான் சொல்ல வந்த கருத்தை தூரிகை துணை கொண்டு அற்புதமாகவும் மிக நேர்த்தியாகவும் வரைந்துள்ளார்.

தமிழின் மீது கொண்ட ஆர்வத்தினால் தமிழ்ப்பற்றாளர் பலரது ஓவியங்கள் இந்நூலில் இடம்பெற்றிருக்கிறது. பேராசிரியர் அ.வித்தியானந்தன் தொடக்கம் தனிநாயகம் அடிகளார், சோ.பத்மநாதன் போன்ற பல பெரியார்களது முகங்களை உயிரோட்டத்துடன் காணக்கூடியதாகவுள்ளது.

வரலாறு நிலைக்கத் தேவையான பல சிறப்பு அம்சங்களைக் கொண்டு தனித் தன்மையுடன் படைக்கப்பட்டிருக்கும் விம்பம் ஓவிய நூலானது,

ஆசை இராசையாவின் முப்பெரும் திறமைகளை உள்ளடக்கியதாகவுள்ளது. முதலாவது அவரின் தூரிகைத் திறன்; இரண்டாவது தாய் தமிழ் கொண்டு அதனை வர்ணிக்கும் நான்கு வரி கவிதைகள்; மூன்றாவது அவரது சுயசரிதையினை வாசகர்கள் ரசிக்கும் வண்ணம் இயற் தமிழில் வார்த்திருப்பது. அவரது நூலில் இடம்பெற்றிருக்கும் விதி எனும் கவிதையில்

**"தொட்டிலில் துயிலும் குழந்தையை**
**எட்டிப் பார்த்தவனை**
**பெண் குழந்தை வடிவில்**
**கைகொட்டிச் சிரித்ததாம் விதி"**

என்ற வரிகள் காலத்தின் கண்ணாடியாக திகழும் இலக்கியத்தின் வடிவமாகவுள்ளது.

எதிர்நீச்சல் எனும் தலைப்பில் வரையப்பட்ட ஓவியமொன்று குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருக்கும் சிறுமியை விபரிக்கின்றது. அதற்கு அவர் எழுதியிருக்கும் நான்குவரி கவிதை நயம்மிக்கது;

**"போர் மேகம் சூழப் பொருள்பண்டமேதுமின்றிச்**
**சீரழிந்த போதும் திடங் கொண்டு பேர்பெற்ற**
**குப்பி விளக்கிற் குலம் விளங்க வந்தவளும்**
**தப்பாமற் கற்பாள் தனித்து"**

அந்த வகையில் காலத்தைக் கடந்தும் வரலாற்றுக் காவியமாக நிலைத்து நிற்கும் இந்நூலின் சிறப்பு மகிழ்ச்சி தருவது; ஓவியக் கலையின் முதுசொம் எனக் கொள்ளத்தக்கது.

ஆசை இராசையா தன் விதி முடியும் காலத்தை ஏற்கனவே கணக்கிட்டிருந்தார் போலும்; இவ்வரிய பொக்கிஷத்தை எமக்களித்து இவ் உலகிலிருந்து கடந்த ஓகஸ்ட் 29 ஆம் திகதி விடைபெற்றிருக்கிறார்.

# யானைகள் பற்றிய கதை

## - கண்காட்சி ஒன்றின் ஊடாக....



ஒலுவில் பள்ளக்காடு என்னும் இடத்தில், பிளாஸ்ரிக் கழிவுகளை உண்பதால் பாதிப்படையும் யானைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் புகைப்படக் கண்காட்சி ஒன்று, கடந்த செவ்வாய் 08.09.2020 அன்று மாலை 5 மணிக்கு, இல. 20, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஜேர்மன் கலாசார நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒளிப் படப்பிடிப்பாளர் திரு. திலக்சன் தர்மபாலனின் நீண்டகால நேரடி முயற்சியினால் ஒளிப்பதிவு செய்யப்பட்ட, ஒலுவிலில் யானைகளுக்கு நேரும் அனர்த்தங்கள் பற்றிய படங்கள் ஆவணப்படுத்தப்பட்டுக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. ஜேர்மன் கலாசார நிலையத்தின் இயக்குனர் கலாநிதி பெற்றா றேமன்ட் அவர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட கண்காட்சியானது 2020 செப்ரெம்பர் 13 வரை மக்கள் பார்வைக்காகத் திறந்திருக்கும்.

இந்த ஒளிப்படக் காட்சியானது சூழலியல் ஒளிப்பட அணுகுமுறை சார்பானது. சூழலியல் ஒளிப்படங்கள் இயற்கைச் சூழலை கலைத்துவத் தேவை கருதியோ, ஆய்வுத் தேவைக்காகவோ அல்லது சூழலைக் கண்காணிக்கும் நோக்கம் கருதியோ பயன்படுத்திக் கொள்வதாகும். அவ்வகையில் இவ்விடயங்களை வெவ்வேறு விகிதாசாரத்திற் கொண்ட விழிப்பூட்டற் செயற்பாட்டை நோக்கியதாக இந்த ஒளிப்படங்களின் காட்சி அமைகிறது. அது ஒருவகையில் கலைக்கும் - செயற்பாட்டு வாதத்திற்கும் இடையிலான பிணைப்பில் இருந்து உருவாவது.

கிழக்கு மாகாணத்தின் குறிப்பிட்ட பிரதேசச்சூழல், அங்கு வாழ்கின்ற மனிதர்களுடனான உரையாடல்கள், தொடர்ச்சியான களப் பயணங்கள், குறிப்பிட்ட சூழல் மீதான தொடர் கண்காணிப்புகள் என்பவற்றின் ஊடாகவே இந்த ஒளிப்படக் காட்சி சாத்தியமாகியுள்ளது. அந்த வகையில் ஆவணப் புகைப்படங்களாகவும் பரிமாணம் பெறுகின்ற இவை புகைப்படப்பிடிப்பளார், தான் தனது சிறு பராயத்தில் கேட்டு வாசித்த விலங்குக் கதைகளுடாக மனதுள் வந்தமர்ந்த யானைகளது இக்கட்டுக்கள் மீதான தனிப்பட்ட கவலையின் வெளிப்பாடு என்றும் சொல்லுகிறார்.

# உண்மையான கைமாறு



யூத அதிகார வர்க்கத்தில் முதன்மை பெற்றிருந்த பரிசேயர்களின் தலைவர் ஒருவனுடைய வீட்டிற்கு விருந்து சாப்பிடச் சென்றிருந்தார் இயேசு. விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் அடித்துப்பிடித்துமுதன்மையான இடங்களைத் தேர்ந்தெடுப்பதை இயேசு கவனித்தார். அப்போது அவர்களுக்கு ஓர் உவமையைச் சொன்னார்:

'யாராவது உங்களைத் திருமண விருந்துக்கு அழைத்திருந்தால், முதன்மையான இடத்தில் போய் உட்காராதீர்கள். ஏனென்றால், உங்களைவிட மதிப்புமிக்க நபரும் அழைக்கப்பட்டிருக்கலாம். உங்களையும் அவரையும்அழைத்தவர்உங்களிடம் வந்து, 'இவருக்கு இந்த இடத்தை விட்டுக் கொடுங்கள்' என்று கேட்பார். அப்போது, நீங்கள் வெட்கத்தோடு கூனிக்குறுகி கடைசி இடத்திற்குப் போகவேண்டியிருக்கும். எனவேநீங்கள் அழைக்கப்பட்டிருந்தால், கடைசி இடத்தில் போய் உட்காருங்கள்; அப்போதுஉங்களைஅழைத்தவர்வந்து, 'நண்பரே, முதன்மையான இடத்தில் போய் உட்காருங்கள்' என்று சொல்வார். அப்போது, மற்றவிருந்தினர்கள் முன்உங்களுக்குக்கவுரவமாகஇருக்கும். தன்னைத்தான்உயர்த்துகிறஎவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தான் தாழ்த்துகிற எவனும் உயர்த்தப்படுவான்' (லூக்கா 14:811) என்றார்.

பிறகு,தன்னைவிருந்துக்குஅழைத்த பரிசேயர் தலைவனைக் கனிவுடன் அருகில் அழைத்த அவர், 'நீங்கள் விருந்தை அளிக்கும்போது, உங்கள் நண்பர்களையோ, சகோதரர்களையோ, உறவினர்களையோ, அக்கம் பக்கத்திலுள்ள பணக்காரர்களையோ அழைக்க வேண்டாம். அப்படிஅழைத்தால்ஒருவேளைபதிலுக்கு அவர்களும்உங்களைஎப்போதாவது அழைக்கலாம்.

அது உங்களுக்குச் செய்யப்படுகிற கைமாறாகிவிடும். அதனால்விருந்து அளிக்கும்போது, ஏழைகளையும் உடல் ஊனமுற்றவர்களையும், கால் ஊனமுற்றவர்களையும், பார்வையற்றவர்களையுமே அழையுங்கள்; அப்போதுசந்தோஷப்படுவீர்கள். ஏனென்றால், உங்களுக்குக்கைமாறுசெய்ய அவர்களிடம் ஒன்றும் இருக்காது. ஆனால், நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலின்போது உங்களுக்குக் கைமாறு கிடைக்கும்' (லூக்கா 15:12 14) என்றார்.

'உளப்பூர்வமான அழைப்பை நிராகரித்த எவரும் நான் அளிக்கிற விருந்தைச் சாப்பிடப்போவதில்லை என்று நான் உங்கள் எல்லாருக்கும் சொல்கிறேன்' என்றார் இயேசு.

# இணக்கமான தீர்வு

மொகமட் அமீர்

'உம்ரா' செய்ய வேண்டும் என்ற நிய்யத்தில் கடமையை நிறைவேற்றாமல், இஹ்ராம் களைந்தால் நிய்யத்திற்கு மாற்றம் செய்த குற்றம் நிகழ்ந்து விடுமே என்று அத்தனை சஹாபாக்களும் இஹ்ராம் களையாமல் காத்திருந்தனர்.

அண்ணல் நபி மக்காவை விட்டு மதீனா நகருக்கு வந்து ஆறு ஆண்டுகள் கடந்து விட்ட காலகட்டம் அது. அப்போது, மக்காவில் உள்ள இறை இல்லமான காபாவை கண்குளிர காண வேண்டும் என்ற ஆவல் நபிகளின் மனதில் ஆழமாய் பதிந்து இருந்தது. அந்த ஆர்வத்தில் மக்கா செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். இதை அறிந்த நபிகளாரின் தோழர்களும் இந்த பயணத்தில் அவருடன் செல்லத்தயார் ஆனார்கள். கிட்டத்தட்ட ஆயிரத்து 500 பேருக்கும் மேலாக அவர்கள் திரண்டனர்.

மக்காவில் நபிகளாரை எதிர்த்த குரைஷி இனத்தவர்களுக்கு இந்த செய்தி எட்டியது. ஆனால் அவர்கள், 'நபிகளார் தலைமையில் மதீனாவாசிகள் நம் மீது படையெடுத்து வருகிறார்கள்' என்று தவறாக கருதினார்கள். எனவே நபிகளார் தலைமையில் வந்த மக்களை, மக்காவின் எல்லையில் ஹுதைய்பிய்யா என்ற இடத்தில் தடுத்து நிறுத்தினர்கள்.

நபிகள் கோமான் அந்த மக்களை நோக்கி 'நாங்கள் காபத்துல்லாவை 'உம்ரா' செய்து (தரிசித்து) விட்டு போகவே வந்துள்ளோம். 'இஹ்ராம்' என்ற ஆடை அணிந்துள்ளோம். இஸ்லாமிய கொள்கையின்படி இந்த ஆடையில் இருக்கும்போது நாங்கள் போர் செய்யமாட்டோம். இதை நீங்களும் அறிவீர்கள். எனவே எங்களுக்கு அனுமதி தாருங்கள். நாங்கள் காபாவை தவாபு செய்து விட்டு சென்று விடுகிறோம்' என்றார்கள்.

ஆனால் மக்காவாசிகள் இதற்கு அனுமதி வழங்க மறுத்து விட்டனர். நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு இரு பிரிவினரும் உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்தனர். அன்றுதான் உலகின் தலைசிறந்த உடன்படிக்கையாக கருதப்படும் 'ஹுதைய்பிய்யா உடன்படிக்கை' கையெழுத்தாயிற்று.

அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகள் அனைத்தும் தங்களுக்கு எதிராக அமைந்திருந்த போதிலும் நபிகள் நாயகம் அதனை ஏற்றுக்கொண்டார்கள். இதற்கு காரணம் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையே. இந்த இடைப்பட்ட காலத்தில் மக்கா வாசிகள் அனைவரும் இஸ்லாத்தில் இணைந்து விடுவார்கள் என்று அவர்கள் நம்பினார்கள்.

உடன்படிக்கை கையெழுத்தாகி விட்டது, ஆனால் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு கிடைக்கவில்லை. காபாவை தவாபு செய்யாமல் எப்படி இஹ்ராம் ஆடையை களைவது என்ற கேள்வி எழுந்தது. 'உம்ரா' செய்ய வேண்டும் என்ற நிய்யத்தில் கடமையை நிறைவேற்றாமல், இஹ்ராம் களைந்தால் நிய்யத்திற்கு மாற்றம் செய்த குற்றம் நிகழ்ந்து விடுமே என்று அத்தனை சஹாபாக்களும் இஹ்ராம் களையாமல் காத்திருந்தனர்.

அடுத்து என்ன செய்வது என்று நபிகள் நாயகம் யோசித்துக்கொண்டு இருந்தார்கள். அப்போது அவரோடு பயணம் வந்திருந்த மனைவி உம்மு ஸல்மா ஒரு யோசனை தெரிவித்தார்.

உம்மு ஸல்மா கூறினார்கள்: 'நாயகமே! உங்கள் தோழர்கள் அனைவரும் உங்களின் ஒவ்வொரு செயலையும் வழிமுறையாய் ஏற்றுக்கொள்பவர்கள். எனவே நீங்கள் முதலில் இஹ்ராம் களைந்து, குர்பானி கொடுத்து, தலைமுடியை இறக்கி விடுங்கள். நிச்சயமாக மற்றவர்களும் உங்களை பின்பற்றி அவர்களும் இஹ்ராம் களைந்து குர்பானி கொடுப்பார்கள்' என்றார்.

நபி பெருமானார் எந்தவித ஆட்சேபனையும் இன்றி அந்த ஆலோசனைக்கு உடன்பட்டார்கள். நபியைத் தொடர்ந்து அத்தனை சஹாபாக்களும் இஹ்ராம் களைந்து, குர்பானி கொடுத்து கடமையை நிறைவேற்றினார்கள். பெரிதாக உருவெடுக்க இருந்த பிரச்சினை மிக எளிதாக தீர்ந்து விட்டது. தன் மனைவியாய் இருந்தாலும் அவர்களையும் பெரிதாய் மதித்து மரியாதை கொடுத்ததால் அவர்கள் கூறிய யோசனை மூலம் இந்த பிரச்சினைக்கு சிறந்த இணக்கமான தீர்வை எட்ட முடிந்தது.

# விளக்கு வைத்த பின்னர் செய்ய கூடாதவை!

விளக்கு வைத்த பின்னர் ஒரு சில பொருட்களை யாருக்கும் கொடுக்க கூடாது என்பது சாஸ்திர நியதி. அதில் முக்கியமாக இருப்பது பணம். ஒரு வீட்டில் விளக்கு வைத்த பின்னர் பணம் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ள மாட்டார்கள். அந்த நேரத்தில் பணத்தை மற்றவர்களுக்கு கொடுப்பது, நம் வீட்டில் இருக்கும் மகாலட்சுமியை விரட்டி அடிப்பதற்கு சமம் என்று சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. இதை வெள்ளிக்கிழமை அன்று தான் கடைபிடிக்க வேண்டும் என்றில்லை. எப்போது விளக்கு வைத்தாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு சாஸ்திரம். அப்படி இருக்கும் பொழுது திடீரென அவசர தேவைக்கு பணம் தேவை எனக் கேட்டு வருபவர்களிடம் நீங்கள் என்னவென்று சொல்வீர்கள்? இது தர்மசங்கடமான நிலையில் உங்களை நிறுத்தும். அவசர தேவைக்கு பணம் கொடுப்பதும் அவசியமான ஒன்று தான். அதே சமயத்தில் விளக்கு வைத்த நேரத்தில் பணம் கொடுப்பதை த்விர்ப்பதும் அவசியமான ஒன்று தான். இரண்டு விஷயங்களும் ஒரே தராசு தட்டில் நிற்கின்றன. இதை சரி சமமாக கையாள்வது எப்படி? என்பதை தான் இந்த பதிவின் மூலம் தெரிந்து கொள்ளப் போகின்றோம்.

உண்மையில் விளக்கு வைத்த பின்னர் நீங்கள் ஒருவருக்கு கைநீட்டி பணமாக கொடுத்தால், குடும்பத்தில் பண வரவு தடைபடும். லக்ஷ்மி கடாட்சம் குறையும். அது எந்த கிழமையில் செய்தாலும் தவறு தான். இதனால் உங்கள் குடும்பத்திற்கு மிகப்பெரிய பேரிழப்பு நிகழும். வீட்டில் விளக்கு ஏற்றுவதற்கு முன் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை இல்லை. ஆனால் நீங்கள் விளக்கு ஏற்றிய பின் மறுநாள் சூரிய உதயத்திற்கு முன்பு வரை பணம் கொடுக்கல் வாங்கல் போன்றவற்றை தவிர்ப்பது தான், குடும்பத்திற்கு நல்லது. இதை எத்தகைய சூழ்நிலையிலும் நீங்கள் கடைபிடித்து வந்தால் வீட்டில் தனவரவிற்கு பஞ்சமிருக்காது. குறைவில்லாத செல்வம் தடையில்லாமல் வரும். சரி இப்பொழுது உயிர் போகிற பிரச்சினையில் இருக்கிறார்கள். உதவி என்று வந்து நிற்கிறார்கள். வீட்டில் விளக்கு ஏற்றி வைத்து விட்டீர்கள்? இந்த சமயத்தில் என்ன செய்வீர்கள்? ஒருபுறம் சாஸ்திரம்! இன்னொருபுறம் மனிதநேயம்! இந்த இரண்டிற்கும் இடையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? மனிதநேயம் தான் முக்கியம் என்பவர்கள் தங்களுடைய வீட்டில் லக்ஷ்மி கடாட்சம் குறைந்தால் பரவாயில்லையா? சுயநலம் பார்க்காமல் மற்றவர்களுக்கு உதவுவது நல்ல விஷயம் தான். இல்லை



என்று கூற வரவில்லை. ஆனால் அதே சமயத்தில் சாஸ்திரத்தையும் கடைபிடிப்பது சிலர் முக்கியம் என்று நினைப்பார்கள். இது போன்ற சமயத்தில் தான் நமக்கு ஆன்மீகமா? அறிவா? என்கிற கேள்வி எழும்.

இரண்டையும் சமன் செய்ய அறிவை கையாளுங்கள். அதற்காக ஆன்மீகத்தை ஒதுக்கி விடாதீர்கள். விளக்கு வைத்த பின்னர் ஒருவர் உதவி என்று மறுக்க முடியாத நிலையில் கேட்கும் பொழுது பண உதவி செய்ய முடியவில்லை என்றாலும் வேறு வகையில் நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியும். அதற்கு விஞ்ஞானம் நமக்கு பல வகைகளை கற்றுக் கொடுத்துள்ளது. உடனடி தேவை இல்லை என்றால் விளக்கு எரிந்து முடிந்த பின் பணமாக அல்லாமல் இன்றைய நவீன காலத்தில் பயன்படுத்தப்படும் இணைய வழியில் பணப்பரிமாற்றம் செய்யலாம். இதுவும் பணம் தானே! என்று சிலர் கேட்கலாம். இது பணமாக இருந்தாலும் உங்கள் கையிலிருந்து, உங்கள் வீட்டில் இருந்து, மகாலட்சுமியை நீங்கள் கொடுப்பதாக அர்த்தம் ஆகாது அல்லவா? அதனால் ஓரளவிற்கு அதன் பாதிப்பு உங்களுக்கு ஏற்படாது. நல்ல விஷயத்திற்காக நாம் செய்யும் இந்த விஷயம் புண்ணியக் கணக்கில் சேர்வதால் பிரச்சனையும் சுலபமாக தீர்ந்துவிடும்.



## இன்றைய நாள்

**மேடம்:** தடைகளைத் தாண்டும் நாள். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி வெல்வீர்கள்.
மனக்குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசவேண்டாம்.

**இடபம்:** முயற்சியால் எண்ணங்கள் நிறைவேறும்நாள். இல்லம்தேடிசுபச்செய்தி வரும். நேர்மையற்ற நண்பர்களை விலக்குங்கள். திடீர் வரவு உண்டு. உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோடக்கூடும்.

**மிதுனம்:** சுமூகமான நாள். நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்வர். பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். பெற்றோரின் உடல்நலன் முன்பைவிடச் சிறக்கும்

**கடகம்:** சிறு சலசலப்புகள் வந்து நீங்கும் நாள். பணியாளர்களுக்குச் சில தடுமாற்றம் ஏற்படும்.
கலைஞர்களுக்கு கவலை வேண்டாம்.
பெண்களுக்கு வெற்றி உறுதி.
குடும்பத்தில் நிம்மதி மீளும்.

**சிம்மம்:** தெய்வநம்பிக்கை கூடும் நாள். சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும். இல்லத்தில் நல்லசம்பவங்கள் நடைபெறும். புதியபொருள் சேர்க்கை உண்டு.

**கன்னி:** மகிழ்ச்சி கூடும் நாள். பிற இனத்தாரின் ஒத்துழைப்பு உண்டு. தொழிலில் அனுபவ மிக்க பங்குதாரர்கள் வந்திணைவர். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள். விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்:** சொல்லும் சொற்கள் வெல்லும் சொற்களாக மாறும் நாள். பிரிய மானவர்களோடு இருந்த பிரச்சினை அகலும். பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** ஆசைகள் நிறைவேற ஆலய வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள். அலைச்சலுக் கேற்ற ஆதாயம் கிடைக்காது. எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி கூட மற்றவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மகரம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள். தடைகள் தானாக விலகும். சந்தித்தவர்களால் சந்தோஷம் உண்டு. விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்திணைவர். திருமணப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**கும்பம்:** கனவுகள் நனவாகும் நாள். தொட்ட காரியம் வெற்றி பெறும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். கல்யாணப் பேச்சுக் கள் முடிவாகும். ஆரோக்கியம் சீராகும்.

**மீனம்:** திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் நாள். வாகனப் பராமரிப்புச் செலவு குறையும். தாய்வழியில் ஏற்பட்ட தகராறுகள் மாறும். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் [illegible] ...காட்டுவார்கள்.

# இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை!

### கனடா விதிக்க வேண்டுமென கென்சர்வேடிவ் கோரிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 13

இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு கனேடிய அரசை வலியுறுத்தியுள்ளார் கனடாவின் கென்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கிராணெட் ஜெனிஸ்.

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் போர் மீறல்கள் தொடர்பில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர். அங்கு தற்போது கண்டனப் பேரணிகள் மற்றும் போராட்டங்களும் இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையிலேயே கனடாவின் கென்சர்வேடிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கிராணெட் ஜெனிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பெருந்தொகையானவர்கள் காணாமல் போயுள்ளனர். கனேடிய தமிழ் மக்கள் இலங்கையில் காணாமல் போன உறவுகளுக்காக பேரணிகள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு கனடா துணை நிற்க வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்றார். (ம-இ)

## கரையொதுங்கிய ஆமை சிகிச்சை பயனின்றி சாவு

கொழும்பு, செப்.13

வில்பத்து தேசிய பூங்காவை அண்மித்த கடற்கரையோரத்தில் காயமடைந்த நிலையில் கரையொதுங்கிய அரிய வகை (Chelonia Mydas) ஆமை ஒன்று சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை கரையொதுங்கிய ஆமையின் கீழ் தாடையில் பலத்த காயங்கள் காணப்பட்டன என்றும், அதையடுத்து முள்ளிக்குளம் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று சுமார் இரண்டு மணித்தியாலயங்களுக்கும் மேலாக சிகிச்சை அளித்துள்ளபோதும், ஆமை உயிரிழந்துள்ளது.

கல் ஆமை, இறைச்சி ஆமை மற்றும் மணல் ஆமை என பல பெயர்களில் அழைக்கப்படும் இந்த ஆமை இலங்கையைச் சுற்றியுள்ள கடல்களில் வசிக்கும் ஐந்து பொதுவான ஆமைகளில் ஒன்றாகும் என சொல்லப்படுகிறது.

இந்த ஆமை மேலே இருந்து பார்க்கும்போது இதய வடிவத்தை ஒத்திருக்கும்.

இந்த இனத்தில் மற்ற ஆமைகளைப் போல வளைந்த கொக்கு இல்லை. மற்றும் பெண் ஆமையை விட ஆண் ஆமை சற்று சிறியது எனவும், இந்த வகை ஆமை ஆண்டு முழுவதும் முட்டையிடுகிறது எனவும் கூறப்படுகிறது.

பொதுவாக ஒரு கூட்டில் சுமார் 100 முதல் 175 முட்டைகள் வரை இடும். இந்த ஆமைகள் வெப்பமண்டல கடல்களிலும், மணல் தீவுகளிலும் அதிகம் காணப்படுகின்றன.

விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் மிகவும் பாதுகாக்கப்பட்ட ஊர்வன இனமாக இந்த ஆமை இனம் பாதுகாக்கப்படுகிறது. (எ-இ)

## அரசமைப்பு உருவாக்கவே மக்கள் ஆதரவு வழங்கினர்

*பௌத்த மகா சபை தெரிவிப்பு*

கொழும்பு, செப்.13

நாட்டுக்கு ஏற்ற புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு மக்கள் பெரும்பான்மையை வழங்கியுள்ளனர் என்று பௌத்த மகா சங்க சபை தெரிவித்துள்ளது.

மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதன் மூலம் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் பயணம் படிப்படியாக உயரும் என்றும் அந்தச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அநுராதபுரம் புனித பூமியில் உள்ள விகாரைகளுக்கு ஜனாதிபதி சென்றிருந்தார். அங்கு மகா சங்கத்தினரிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னர் நடந்த கலந்துரையாடலில் இந்த விடயங்கள் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# மாணவர் போசணை மட்டத்தை மேம்படுத்த தினம் ஒரு முட்டை

கொழும்பு, செப்.13

பாடசாலை மாணவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்துவதற்கு தினமும் ஒரு முட்டையை வழங்குவது தொடர்பில் ஆராயுமாறு கல்வி அமைச்சருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் மற்றும் முட்டை உற்பத்தியாளர்களின் சங்கத்தினரை விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று சந்தித்தபோதே பிரதமர் இதனைத் தெரிவித்தார். சந்திப்பின்போது, பேக்கரி உற்பத்திகளில் முட்டை [illegible] விலை தாக்கம் செலுத்தும் விதம் குறித்து பேக்கரி



உரிமையாளர்களின் சங்கத்தினர் பிரதமருக்கு தெளிவுபடுத்தினர்.

முட்டை உற்பத்தியில் ஏற்படும் அதிக செலவினங்கள் தொடர்பில் முட்டை உற்பத்தியாளர்கள் விளக்கமளித்ததுடன், நாட்டின் அனைத்து பேக்கரி உற்பத்தி நிறுவனங்களுக்கும் [illegible] நிலையான மொத்த விலைக்கு முட்டையைப் பெற்றுக் கொடுப்பதற்கு முடியுமானதாக அமையும் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இரு சங்கங்களுக்கும் இடையே ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு சம்பந்தப்பட்ட பிரதிநிதி களுக்கு பிரதமர் அறிவித்தார். மேலும் கோழிக் குஞ்சு ஒன்றின் விலையை ரூபா 175-200 இற்கும் இடையே குறைப்பது தொடர்பிலும் முட்டை உற்பத்தியாளர்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கான உடன்பாடு விடயத்தில் தலையீடு செய்யுமாறும் துறை சார்ந்த அமைச்சர்களுக்கு இச்சந்திப்பின் போது பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். (வ-இ)

# உலகுக்கே நாகரிகத்தை கற்பித்தவர்கள் தமிழர்கள்!

## வீரசேகரவுக்கு பண்பாட்டுப் பேரவை பதிலடி

யாழ்ப்பாணம், செப்.13

உலகுக்கே நாகரிகத்தையும், கலாசாரத்தையும் கற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள் தான் என்பதை சரத் வீர சேகர தெரிந்துகொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய பண் பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைமை ஒருங்கி ணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் அனுப் பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

இராஜாங்க அமைச்சர்களில் ஒருவரான அட்மிரல் சரத் வீரசேகர நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இன்றுவரை தமிழ் மக்களுக்கு எதிராக வும், தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதி நிதிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிராகவும், மிகவும் தீவி ரமான இனவாதக் கருத்துக்களையும், தமிழர்களைச் சிறுமைப்படுத்தும் கருத்துக் களையும் இறுதியாக தமிழர்களின் அடை யாளங்களையும், கலாசாரங்களையும் கொச்சைப்படுத்தும் விதமாகவும் கருத்துக் களைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வரு கின்றார். தமிழர்களின் கலாசாரங்களை யும், நாகரிக முறைகளையும் பற்றி கதைப்பதற்கு இன்று சிங்கள இனவாதியா கக் காணப்படுகின்ற சரத் வீரசேகரவுக்கு எவ்வித அருகதையும் இல்லை என்பதை அவருக்குத் தெரியப்படுத்துவதோடு சரத் வீரசேகரவுக்கு இன்னுமொரு விடயத்தை யும் கூறி வைக்க விரும்புகின்றோம்.

தமிழர்கள் இந்த உலகில் உள்ள மூத்த குடிகளில் ஒன்று தமிழர்கள் பேசும் தமிழ் மொழியும் உலகின் பழமையான மூத்த மொழி. அத்தோடு தமிழர்களது கலாசார, பண்பாடுகளே உலகில் மிகவும் பழமை வாய்ந்தவை இன்றும் நடைமுறை வாழ் வில் உள்ளவை. இன்று இந்த உலகமே நாகரிகத்தையும், பண்பாட்டையும் தமிழர் களிடம் இருந்துதான் கற்றுக் கொண்டது என்பதனை சரத் வீரசேகரவும் இவரைப் போல் நாடாளுமன்றத்திலும் சரி வெளியே யும் சரி தமிழர்களுக்கு எதிராகக் கூக்குர லிடும் அனைத்து இனவாதிகளும் தெரிந்து கொள்ள வேண்டும் - என்றுள் ளது. (ப)

# வங்கி சமாசத்துக்கு புதிய இயக்குநர் சபை

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கி களின் சமாசத்துக்கு புதிய இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி சமாச மண்டபத் தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் இந்த இயக்குநர் சபை கூட்டுறவுச் சங் கங்களின் தலைவர்களால் தெரிவுசெய் யப்பட்டது.

இதில் பனை, தென்னைவள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் தலைவராக எஸ்.செல் வராசா தெரிவுசெய்யப்பட்டார். மாவட்டக் கூட்டுறவு சபையின் தலைவர் இ.சுந் தரலிங்கம் உபதலைவராக தெரிவா னார். 11 பேர் கொண்ட இந்த இயக்கு நர் சபைக்கு ஒன்பது உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மற்றைய இரண்டு உறுப்பினர்களையும் மாகா ணக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக் களம் நியமிக்கும் என அறிவிக்கப்பட் டுள்ளது. (ப-17)

# பொதுச்சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

முல்லைத்தீவு, செப்.13

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட விசுவமடு பொதுச் சந்தை சுகாதார சீர்கேடுகள் நிறைந்தது காணப்படுகிறது என்று வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் கவலை தெரிவித் தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரி வித்ததாவது;

விசுவமடு பொதுச்சந்தை சுகாதா ரமற்ற முறையில் காணப்படுகிறது. இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்வதில்லை. சந்தைப்பகுதியில் விற்பனை செய்யப்படுகின்ற மீன்கள் பல பாவனைக்கு உகந்தவை யாக இல்லை. சந்தை உற்புறம் செல்ல முடி யாத நிலையில் துர்நாற்றம் வீசுகிறது. சந்தைக் கழிவுத்தொட்டியும் நிரம்பிய நிலையில் பல இடங்களில் கழிவு நீர் வெளியேறுகின்றது. இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது. எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக் கவேண்டும் - என்றனர். (ப-113)

# பரிபாலன சபை தெரிவு

யாழ்ப்பாணம், செப்.13

கொழும்புத்துறை மேற்கு வதிரீட விநா யகர் ஆலயத்துக்குப் புதிதாக பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆறாம் திகதி ஆலய மண்டபத் தில் இடம்பெற்ற ஆலயத்தின் மகா சபைக் கூட்டத்தில் பதினைந்து பேர் கொண்ட பரிபாலன சபை தெரிவு செய் யப்பட்டது என செயலாளர் என்.காண்டீ பன் தெரிவித்தார்.

தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி, செய லாளர் என்.காண்டீபன், பொருளாளர் என். ஆனந்தராசா, உப தலைவர் பொ.சிவப்பிரகாசம், உபசெயலாளர் இ.தனஞ்செயன், நிர்வாக உறுப்பினர்க ளாக பரா சாந்தகுமார், பா.நந்தகுமார், ரி.சிவலிங்கம், கு.சோதிநாயகி, மு.சரவ ணன், சி.பிரணவன், என்.பிரதீபன், திருமதி சி.தவநாயகி, எம்.ஜெயசந்தி ரன், கே.பாலகிருஷ்ணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-17)

# முல்லை மந்துவில் படுகொலை: நினைவேந்தலுக்கு ஏற்பாடு

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவு, மந்துவில் படு கொலையின் 21ஆம் ஆண்டு நினைவு தினத்துக்கான ஏற்பாடு கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மந்துவில் சந்தை வளாகத்தில் கடந்த 15.09.1999 ஆம் ஆண்டு இலங்கை விமா னப்படை விமானங்கள் நடத்திய மிலேச்சத்தனமான குண்டுத் தாக்குதலில் அப்பாவிப் பொது மக்கள் 22 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்க ளுடைய 21ஆம் ஆண்டு நினைவு தினமே வரும் 15ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ளது. ஆண்டு தோறும் குறித்த பகுதி யில் நினைவு நிகழ்வுகள் நினை வேந்தல் ஏற்பாட்டுக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலை யில் தாயக உறவுகள் நினை வேந்தால் அமைப்பால் மந்து வில் சந்திப்பகுதியில் இம்முறை யும் இந்த நினைவேந்தல் கடைப் பிடிக்கப்படவுள்ளது என்று தெரி விக்கப்படுகிறது. (ப-19)



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் ஆசிரிய பயிலுநரான த.பரமநாதன் "சுருக் கெழுத்து வழிகாட்டல்" என்ற நூலை நேற்றுமுன்தினம் கலாசாலையில் வெளியிட்டார்.

நூலை கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கம் வெளியிட்டு வைக்க, யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி செல்வமலர் செல்வராசா பெற்றுக்கொண்டார். (ஐ)

# நல்லூர் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், செப்.13

நல்லூர் பிரதேச சபைக்கு உட் பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப் புச் செயற்பாடுகள் கிராமமட்ட நிதியில் விரைவில் ஆரம்பிக் கப்படவுள்ளது என்று பிரதேச சபையின் தவிசாளர் த.தியாக மூர்த்தி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது;

டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் அடுத்த வாரம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. கிராமங் கள் தோறும் சென்று திண்மக் கழிவகற்றல் மற்றும் டெங்கு தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பது, துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் படுவது, பொது இடங்களில் பதாகை கள் கட்டுவது போன்ற செயற் பாடுகள் இதன்போது முன் னெடுக்கப்படும். அதனைவிட கிராமங்கள் தோறும் சிரமதா னங்கள் போன்றவற்றை நடத் தவும் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. பொது இடங்க ளில் கழிவுகள், குப்பைகளைக் கொட்டுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கையும் மேற்கொள் ளப்படும் - என்றார். (ப-17)

# தேங்குகிறது போத்தல் கள்

## சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.13

யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட போத் தல் கள்ளை வடக்கின் ஏனைய மாவட்டங்களில் சந்தைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொண்டுதருமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக கோரிக்கைக் கடிதம் ஒன்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்க கொத்தணி யின் தலைவர் எஸ்.செல்வராசா தெரிவித்தார்.

கடந்த போகத்தின்போது யாழ்.மாவட்டத்தில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினால் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட போத்தல்களில் கள் அடைக்கப்பட்டது.

இந்த போத்தல் கள்ளுக்குப் போதிய சந்தை வாய்ப்பின்றித் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வடக்கின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட் டங்களில் கூடுதலாக தென்பகுதியில் இருந்தே போத்தல் கள் தருவிக்கப்பட்டு விற்பனை செய் யப்பட்டு வருகின்றது. இதனால் எமது பிரதேசத் தில் உற்பத்தி செய்யப்பட்ட போத்தல் கள்ளை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் உள்ள பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ்.மாவட்ட சங்கங்களி னால் உற்பத்தி செய்யப்பட்ட போத்தல் கள்ளைப் பெற்று விற்பனை செய்வதற்கு முன்வர வேண் டும். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (ப-17)

# '20'இல் எவ்வாறான திருத்தங்கள்? பிரதமரிடம் அறிக்கை கையளிப்பு!

## புதன் அமைச்சரவையில் முன்வைப்பு

கொழும்பு, செப். 13

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இவ்வாரம் கையளிக்கப்படவுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான ஆளுங்கட்சியைச் சேர்ந்த 9 பேரடங்கிய இக்குழு கடந்த வியாழக்கிழமை 11ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் விசேட கூட்டமொன்று நாளைமறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதன்போது '20' தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான அறிக்கை பிரதமரிடம் எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தன்று கையளிக்கப்படும் அவ்வறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

அதன்பின்னர் இவ்வறிக்கை ஆளுங்கட்சி நாடாளுமன்ற குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் எந்தவொரு சரத்தும் 20 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் இல்லை என நம்பிக்கை வெளியிட்டுள்ள நீதி அமைச்சர், திருத்தங்கள் பற்றி ஆளுங்கட்சி கூட்டத்திலேயே முடிவெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-44)

# கடலில் மூழ்கி மாணவன் சாவு

வாழைச்சேனை, செப்.13

17 வயதுடைய சிறுவன் கடலில் மூழ்கி மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளான் என கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் பாசிக்குடா யானைக் கல் கடல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை செம்மேனோடையைச் சேர்ந்த யாவத் முகமட் ரிஸ்வி வயது என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (வ-150)



# இலங்கை பணிப்பெண் டுபாயில் உயிரிழப்பு

கொழும்பு, செப்.13

இலங்கை பணிப்பெண் ஒருவர் டுபாயில் சித்திரவதை செய்யப்பட்டு உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 46 வயதான இந்தப் பெண்ணை சித்திரவதை செய்தமைக்காக குவைத் தம்பதியினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

உடலில் வெட்டுக்காயங்கள் மற்றும் தீக்காய தடயங்களுடன் அவர் அமிரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)


பெற்றுக் கொள்ள விருப்பமான

DATA LOAN

326 MB RS. 29

896 MB RS. 49

1793 MB RS. 99

எதிர்பாராமல் டேட்டா முடிந்து விட்டால் டக்கென்று மொபிடெல் இடமிருந்து பிரச்சினைகள் எதுவுமில்லாமல் டேட்டா லோன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

செயற்படுத்த அழையுங்கள் #170#

4G

Sri Lanka Telecom Mobitel

மேலதிக கட்டணம் மற்றும் வரிகள் உண்டு. நிபந்தனைகள் உண்டு.


## தெங்குசார் உற்பத்திகள் ஏற்றுமதியில்

# Tropicoir Group

## உயர் வருமானமீட்டுநராக விருது வழங்கிக் கௌரவிப்பு






2 வது இடப்பக்கமிருந்து: அரச பெருந்தோட்ட அமைச்சின் செயலாளர், ஜனிந்த துனுவில ட்ரொபிக்கொயர் குழுமத்தின் தலைமை செயற்பாட்டு அதிகாரி, திரு. அருந்திக பெர்னாண்டோ அரச பெருந்தோட்டத்துறை அமைச்சர், கௌரவ. ரமேஷ் பதிரன பெருந்தோட்டத்துறை அமைச்சர் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் ஜெயந்த விக்ரமசிங்க.



தொழிற்சாலை ஊழியர்கள்

Premier Tech Lanka Pvt. Ltd, Growrite Substrates Pvt Ltd, Euro Substrates Pvt. Ltd மற்றும் Tropicoir Lanka Pvt. Ltd. ஆகியவற்றைக் கொண்ட Tropicoir குரூப். இலங்கையின் சிறந்த தெங்குசார் உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியாளருக்கான விருதை லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்டது. இந்த நிகழ்வு 2020 செப்டெம்பர் 02ஆம் திகதி இடம்பெற்றது. தேங்காய் தினத்தன்று இந்த விருது வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

ஏற்றுமதித் தரம் வாய்ந்த தெங்குசார் உற்பத்திகளை தயாரிக்கக்கூடிய முறையான தொழில்நுட்பங்களைத் தன்வசம் கொண்டுள்ள Tropicoir, இலங்கையின் உயர் தரம் வாய்ந்த தெங்குசார் உற்பத்திப் பொருட்களை உலகளாவிய ரீதியில் ஏற்றுமதி செய்வதில் முன்னோடியாக அமைந்துள்ளது. தென்னங்கரி அதிகளவு நீரைத் தேக்கி வைத்திருக்கும் திறன் கொண்டது. அதன் எடையின் எட்டு மடங்கு வரை கொள்ளளவுத் திறனைக் கொண்டுள்ளது. பயிர்ச் செய்கை காலப்பகுதியில் குறைந்தளவு நீர் பாய்ச்சும் தேவையைக் கொண்டுள்ளது. இதனூடாக, சூழலுக்கு நட்பான சிறந்த மாற்றீட்டுத் தயாரிப்பாக அமைந்துள்ளதுடன், உலகளாவிய ரீதியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவோர் மத்தியில் அதிகளவு நாடப்படும் தயாரிப்பாகவும் அமைந்துள்ளது. சில ஆண்டு காலத்துக்கு பயன்படுத்தக்கூடிய நிலையான தன்மையை கொண்டதாகவும் தென்னங்கரி அமைந்துள்ளது.

Tropicoir குரூப் ஒ.்வ் கம்பனிஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் தினேஷ் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "ஆராய்ச்சிகளை முன்னெடுப்பது என்பது Tropicoir இன் திட்டங்களில் அங்கமாக அமைந்துள்ளது. இதனூடாக, தெங்கு உமியைப் பயன்படுத்தி, நாம் உயர் தரம் வாய்ந்த புத்தாக்கமான உற்பத்திகளை உருவாக்கி, பங்காளர்களுக்கு பெறுமதி சேர்க்கின்றோம். சர்வதேச ரீதியில் பல ஆண்டு காலமாக இலங்கையின் மாபெரும் ஏற்றுமதியாளர் எனும் பெருமையையும் நாம் கொண்டுள்ளோம்." என்றார்.

தினேஷ் பெர்னாண்டோவின் கூற்றுப்படி, தற்போது இலங்கை விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்ப தோட்டக்கலை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு லட்சியத் திட்டத்தில் டிராபிகோயர் செயல்பட்டு வருகிறது, கடந்த இரண்டு தசாப்தங்களில் 45 க்கும் மேற்பட்ட நாடுகளில் உயர் தொழில்நுட்ப தொழில்முறை உற்பத்தியாளர்களைக் கையாள்வதன் மூலம் உருவாக்கப்பட்ட திறன்களைப் பயன்படுத்துகிறது.

"தோட்டக்கலையில் உள்ளூர் இளைஞர்களை ஈடுபடுத்துவதற்கு, எங்கள் பரந்த சர்வதேச கூட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் வலைப்பின்னலைப் பயன்படுத்த நாங்கள் விரும்புகிறோம், இதன் மூலம் அவர்களின் நீண்டகால வெற்றிக்கான வாய்ப்புகளை கணிசமாக மேம்படுத்துகிறோம்" என்று வலியுறுத்தினார்.

பெருந்தோட்டங்களை விரிவாக்கம் செய்து, பெருந்தோட்டத்துறையின் நிலைபேறாண்மையை உறுதி செய்து கொள்வது நிறுவனத்தின் நீண்ட கால நோக்கமாக அமைந்துள்ளது. இதனூடாக, வளியை தூய்மையாக்கிக் கொள்ள பங்களிப்பு வழங்க முடியும் என்பதுடன், காபனை அகத்துறிஞ்சி, நிழலை வழங்கி, உணவு மற்றும் வசிப்பிடத்தை வழங்கக்கூடியதாக இருக்கும். தென்னை மரங்களால் பெற்றுக் கொள்ளக்கூடிய பல்வேறு அனுகூலங்களில் சில மேலே காட்டப்பட்டுள்ளன. நாட்டில் தெங்குச் செய்கையை அதிகரிப்பதனூடாக, இழந்துள்ள வனாந்தரப் பகுதியை ஈடு செய்ய முடியும் என்பதுடன், உயிரியல் பரம்பலை பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதில் Tropicoir நம்பிக்கை கொண்டுள்ளது.



பசுமைவீட்டு தக்காளி பயிர்




www.tropicoirlanka.com | www.eurosubstrates.com

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
09 • 01 • 1949



மறைவு
16 • 08 • 2020

### திருமதி அன்னலட்சுமி செல்வநாயகம்

உள்ளமெனும் பெருவீட்டில்
உறுதுணையாய் இருந்தவளே
கள்ளமில்லா உன் மனதை
காலமெலாம் நினைத்திருப்போம்
மெள்ள வரும் வாய் மொழியால்
மேதினியில் வழிநடத்தி – எமை
அள்ளி அணைத்தவளே
அன்னையே அடைகசாந்தி

அன்னை இல்லம்,
துரைவீதி, இணுவில்.

உங்கள் நினைவோடு
குடும்பத்தினர்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
09 • 04 • 1955



ஆண்டவன் அடியில்
17 • 08 • 2020

### அமரர் கானதாசன் செல்வராணி

கடந்த 17.08.2020 சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு அமரர் கானதாசன் செல்வராணி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (14.09.2020) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 16.09.2020 புதன்கிழமை மு.ப. 11.30 மணியளவில் முத்துஐயன்கட்டு தட்டயமலையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


*இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**60, பூந்தோட்டம், தட்டயமலை,**
**முத்துஐயன்கட்டு,**
**ஒட்டுசுட்டான்**

**கணவர் - கானதாசன்**
**077 260 6408**
**மற்றும் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
19 • 12 • 1986



இறப்பு
11 • 09 • 2020

### ஜெரீஷன் அருமைநாயகம்

யாழ்ப்பாணம், உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணம், உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்டிருந்த ஜெரீஷன் அருமைநாயகம் அவர்கள் கடந்த (11.09.2020) வெள்ளிக்கிழமையன்று காலமானார்.

